# கொள்கை அறிக்கை
# அமைப்பு விதிகள்



புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி
தமிழ்நாடு


# கொள்கை அறிக்கை
# அமைப்பு விதிகள்

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE



புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி
தமிழ்நாடு

முதற்பதிப்பு: ஜூன், 1999



தொடர்புக்கு:

நன்கொடை: ரூபாய் ஐந்து

# கொள்கை அறிக்கை

***அன்பிற்குரிய மாணவர்களே, இளைஞர்களே!***

அதிகாலைச் சூரியனைப் போன்று புதுமையும் பொலிவும் கொண்டது மாணவர் - இளைஞர் பருவம். மாணவர்களும் இளைஞர்களும் எந்தவொரு நாட்டிலும் அந்நாட்டின் அறிவுச் செல்வங்களாகக் கருதப்படுகிறார்கள். துடிப்பும் போர்க்குணமும் படைப்பாற்றலும் கொண்ட மாணவர்களும் இளைஞர்களும் வரலாற்றில் முக்கியமானப் பங்கினை ஆற்றி வந்திருக்கின்றனர். ஆனால், நம் இந்திய நாட்டில் அவர்களின் நிகழ்காலமோ கொந்தளிப்பும் பிரச்சினைகளும் கொண்டதாக உள்ளது. எதிர்காலமோ நிச்சயமற்றதாக, இருண்டதாக இருக்கின்றது.

## 1. அனைவருக்கும் கல்வி; அரசின் ஏமாற்று

படிப்பும், வேலைவாய்ப்பும் சூதாட்டமாகவும் பணம் படைத்த மேட்டுக்குடியினர் மட்டுமே அனுபவிக்கும் சலுகையாகவும் ஆகிவிட்டது. ஒவ்வொரு படிப்பிற்கும் ஒரு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தனியார் கல்விக் கொள்ளையர்களை மக்களே வரவேற்கும் வகையில் கல்வித் துறையை அரசாங்கம் சீரழித்து வருகின்றது.

இலவசக் கல்வி ஏட்டளவில்தான் உள்ளது. மேல்நிலை பள்ளி மட்டம் வரை கட்டிட நிதி, நன்கொடை என்ற பெயர்களில் பெற்றோர்கள் கொள்ளையடிக்கப்படுகிறார்கள். பாடப்புத்தகங்கள், நோட்டுகள், சீருடைகள் போன்றவற்றை வாங்க முடியாமல் கூலி விவசாயிகள் மற்றும் உழைப்பாளர்கள் வீட்டுப்பிள்ளைகள் தவிக்கின்றனர். 80% மதிப்பெண்கள் பெற்றாலும் பணம் இல்லாததால் கல்லூரியில் சேர முடியவில்லை. பெரும்பான்மையான மாணவர்கள் கல்வியைக் கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஏறத்தாழ 75% மக்களுக்கு கல்வி எட்டாக்கனியாக மாறிக் கொண்டிருக்கிறது. கல்வித் துறையில் தனியார் கொள்கையை ஊக்குவிக்கும் அரசு மக்களுக்கு கல்வியளிப்பதில் அக்கறையுள்ளது போன்று காட்டிக்கொள்ள முதியோர் கல்வி, முறைசாராக் கல்வி, இலவசக் கல்வி போன்ற திட்டங்கள் மூலம் நாடகமாடி வருகின்றது.

நாடு முழுவதிலும் ஏறத்தாழ 60% பள்ளிகளுக்கே கட்டிடங்கள் இருக்கின்றன. நூலக வசதி 13.3% பள்ளிகளில் மட்டுமே உள்ளது. 40% பள்ளிகளில் கரும்பலகைகள் இல்லை. ஏறத்தாழ 10 இலட்சம் குடியிருப்புகளில் ஆரம்பக்

கல்வி வசதியில்லை. 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை உள்ள பள்ளிகளில் 85% பள்ளிகள் ஓராசிரியரை மட்டும் கொண்டுள்ளன.

உலகில் கல்லாதோர் எண்ணிக்கையில் பாதிக்கும் மேலானோர் இந்தியாவில்தான் உள்ளனர். கல்வியில் மேம்பட்ட பல நாடுகள் தமது தேசிய வருவாயில் 6% முதல் 9% வரை கல்விக்கு ஒதுக்குகின்றன. ஆனால் நமது நாட்டிலோ இது வெறும் 2.5% ஆக மட்டுமே உள்ளது. இது ஊழியர்கள், ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் நிர்வாக செலவுகளுக்கே போதுமானதாக இல்லை. இதற்கும் மேலாக ஏதும் ஒதுக்கீடுகள் செய்தால்தான் கல்வி மேம்பாட்டுக்கான பணிகள் எதையும் செய்ய முடியும்.

நமது நாட்டில் 1-ஆம் வகுப்பில் சேரும் ஒவ்வொரு 100 மாணவர்களிலும் 37% பேர் மட்டுமே ஐந்தாவது வகுப்பு வரை தொடர்கின்றனர். 18% பேர் மட்டுமே 10-வது வகுப்பு வரை செல்கின்றனர். கல்லூரிப் படிப்பிற்கு வெறும் 3% பேர் மட்டுமே செல்கின்றனர். பெண்களைப் பொருத்தவரை நிலைமை இன்னும் படுமோசமாக உள்ளது.

## 2. சலிப்பூட்டும் கல்வி

கற்பிக்கப்படும் கல்வியும் கற்பிக்கும் முறையும் மாணவர்களின் படைப்பாற்றலையும் சுதந்திரமான சிந்தனைப் போக்கையும் ஊக்குவித்து வளர்ப்பதாக இல்லை. தன்னம்பிக்கையின்மை, கட்டுப்பெட்டித்தனம், கோழைத்தனம் ஆகியவற்றை ஊட்டுவதாகவே கல்வி உள்ளது. ஆசிரியர்களின் கற்பிக்கும் முறை கூலிக்கு மாரடிப்பதாகவே உள்ளது. தேர்வு முறையோ மனப்பாடம் செய்யும் ஆற்றலை மதிப்பிடுவதாகவே உள்ளது. அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடையதாகவோ, அதற்கு பயன்படுவதாகவோ கல்வி இல்லை; மாணவர்களின் சிந்தனை ஆற்றலை, உற்சாகத்தைத் தூண்டுவதாகவும் கல்வி இல்லை; படித்தாலும் மேற்படிப்புக்கு இலட்சக் கணக்கில் பணம் செலவழிக்க வேண்டியுள்ளது; இத்தனைக்கும் பிறகு வேலை கிடைப்பதோ அரிது. இவைகளினால் இன்றைய கல்வி மாணவர்களுக்கு சுமையாகவும் சலிப்பூட்டுவதாகவுமே உள்ளது.

## 3. இந்தியக் கல்வித் துறையில் நிலவும் ஜனநாயக விரோதப் பண்புகள்

கல்வித் துறையை நிர்வகிப்பது, கல்விக் கொள்கையை வகுப்பது போன்றவை அனைத்தும் மாணவர்களுடன் நெருக்கமில்லாத அதிகார வர்க்கத்தினராலேயே மேற்கொள்ளப்படுகின்றன. பல்கலைக் கழகங்களை நிர்வகிக்கும் உறுப்புகளான செனட் மற்றும் சிண்டிகேட்டுகளில் மாணவர்களுக்கு எவ்விதப் பிரதிநிதித்துவமும் இல்லை. பதவி வெறியர்களாலும் பணம் படைத்தவர்களாலும் இவ்வமைப்புகள் நிரப்பப்பட்டுள்ளன. நாட்டின் போலிஜனநாயகத் தேர்தலில் நடக்கும் தில்லுமுல்லுகள் அனைத்தும் இவ்வமைப்புகளுக்கான தேர்தல்களிலும் கடைப்பிடிக்கப்படுகின்றன. 1986-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட புதிய கல்விக் கொள்கை மீது அறிவாளர்கள், கல்வியாளர்கள்

முன்வைத்த மாற்றுக் கருத்துக்களை பரிசீலனைக்கே எடுத்துக் கொள்ளாமல், நாடாளுமன்றத்தில் கூட விவாதிக்காமல் அதை அரசு அப்படியே அமுல்படுத்தியது.

இவ்வாறு திணிக்கப்பட்ட பொதி மூட்டையைத்தான் இந்திய மாணவர்கள் வலுக்கட்டாயமாக சுமக்கிறார்கள். கல்வித் துறையில் அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்துவதாகக் கூறி அரசியலகற்றல் என்பதைத் திட்டமிட்டே ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்கின்றனர். மொழி, இன, நாட்டுப்பற்று கொண்ட ஆசிரியர் - மாணவர்களால் நடத்தப்படும் போராட்டங்கள் கடுமையாக அடக்கப்படுகின்றன. தமது சொந்தப் பொருளாதார நலன்களுக்காகக் கூட மாணவர்கள், ஆசிரியர்கள் ஜனநாயக உணர்வுடன் போராடுவதையும் சீர்குலைவு நடவடிக்கைகளாக அரசு பார்க்கிறது. ஒவ்வொரு கல்லூரி வளாகத்திற்குள்ளும் காவல் நிலையங்களை அமைக்க புதிய கல்விக் கொள்கை வழிகாட்டியுள்ளது.

மாணவர்களுக்கான பேரவைத் தேர்தல்கள் ஜனநாயக முறைப்படி நடத்தப்படுவதில்லை. மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் கூட்டம் போட தடைவிதிக்கப்படுகின்றனர். போர்க்குணமிக்க மாணவர்களைக் கல்லூரியை விட்டு வெளியேற்றி விடுவதாக மிரட்டுகின்றனர். மாணவர்கள் மத்தியில் ஒற்றர்களை ஊடுருவவிட்டு பழிவாங்குகின்றனர். தமது முந்தைய போராட்டங்களின் மூலம் பெற்ற உரிமைகள் பலவற்றையும் புதிய தலைமுறை மாணவர்கள் மீண்டும் புதிய போராட்டங்கள் நடத்தியே பெற்றிட வேண்டியுள்ளது. மாணவர்களை ஒழுக்கமற்றவர்கள், வன்முறை சக்திகள் என்றே தமது பிரச்சாரச் சாதனங்கள் மூலம் அரசு ஒருதலைபட்சமாக பிரச்சாரம் செய்து வருகிறது.

## 4. மக்கள் நலன், சமூக நலன் இல்லாத கல்வி

இன்றையக் கல்விமுறை தனிநபர்களை துதிபாடுகின்றது. பெருந்திரளான மக்கள் ஆற்றிய பாத்திரமும் மகத்தான உழைப்பும் மூடி மறைக்கப்பட்டு, மக்கள் மந்தைகள் போல காட்டப்படுகின்றனர். மக்களையும் செல்வ வளங்களையும் சூறையாடிய மன்னர்களின் போர் சாகசங்களும் மன்னனும் மன்னனைச் சுற்றியிருந்த ஒட்டுண்ணி சுரண்டல் கும்பல்களின் நடத்தைகளும் தான் வரலாறாக சித்தரிக்கப்படுகின்றன.

புராண, இதிகாச கற்பனைகள், மூடப்பழக்க வழக்கங்கள், குருட்டுத்தனமான பக்தி - நம்பிக்கை ஆகியவற்றை நமது கல்வி கற்பிக்கின்றது. சுதந்திரமான சிந்தனையையும் பகுத்தறிவு பூர்வமான, சனநாயக பூர்வமான விமர்சன ஆர்வத்தையும் கொண்ட இந்தியாவின் பாரம்பரிய சிந்தனை முறைகள் திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன.

வரையறுக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தில் தேர்ச்சி பெறுவதையும் போட்டியில் முந்திக்கொண்டு நல்ல வேலையை அடைய வேண்டும் என்ற தன்னல வெறியையும்தான் இன்றையக் கல்விமுறை மாணவர்களுக்குப் புகட்டுகின்றது. நல்ல குடிமகனாக வளர்ப்பதை இக்கல்விமுறை குறிக்கோளாக என்றுமே

கொண்டிருக்கவில்லை. முதலாளியின் லாப உற்பத்திக்குத் தேவையான பொறியியலாளர்கள், தேர்ச்சிபெற்றத் தொழிலாளர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள் ஆகியோரையும் மக்களை அடக்கி ஒடுக்கும் அரசு எந்திரத்தை நிர்வகிக்கும் அதிகார வர்க்கத்தையும் அலுவலர்களையும் உருவாக்குவதுதான் கல்விமுறையின் அடிப்படை நோக்கமாக இருக்கின்றது.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கொள்கைகளினால், இன்று, தேசங்கடந்த தொழிற் கழகங்களுக்குத் தேவையான தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், வல்லுனர்களை உருவாக்கும் பாடத் திட்டங்களும் ஆராய்ச்சித் துறைகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

ஆடம்பர வாழ்க்கையை அடைவதற்கான உரிமையே கல்வி என்ற மனநிலைக்கு மாணவர்கள் ஆக்கப்பட்டுவிட்டனர். அற்ப சிந்தனையும் லாப நோக்கமும் கொண்டவர்களாகவே மாணவர்களை இன்றைய கல்வி முறை உருவாக்குகின்றது. சமுதாய சிந்தனை, நாட்டுப்பற்று, மக்கள் மீதான அக்கறை கொண்டவர்களாகவும், அநியாயம் - அக்கிரமத்திற்கு எதிராக போராட வேண்டும், பொது நலனுக்கு தனிநபர் நலனை தியாகம் செய்ய வேண்டும் என்ற சிந்தனையும், ஒழுக்கமும் ஜனநாயக உணர்வும் கொண்டவர்களாகவும் மாணவர்களை உருவாக்குவதற்கு பதில் இன்றைய கல்வியும் சமுதாய அமைப்பும் மாணவர்கள் - இளைஞர்களை தன்னலவாதிகளாக, அராஜகவாதிகளாக மட்டுமே உருவாக்குகிறது.

உழவர்கள், தொழிலாளர்கள் போன்ற கோடிக்கணக்கான உடலால் உழைக்கும் மக்களை இந்தக் கல்விமுறை சிந்திக்கத் திறனயற்ற, அறிவற்ற மந்தைகள், என்று சித்தரிக்கின்றது; உடல் உழைப்பை இழிவுபடுத்துகிறது. மூளை உழைப்பே உயர்வானது என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. இதனடிப்படையில் தீர்மானிக்கப்படும் ஊதிய வேறுபாடுகள், சமூக தகுதி ஆகியவை இக்கருத்துகளுக்கு மேலும் உரமூட்டுவதாக உள்ளன.

உலகம், உயிர்கள், மனிதனின் தோற்றங்களைப் பற்றி மொழிப் பாடல்களில், மத - வேத நூல்களில் விஞ்ஞானத்திற்கு புறம்பான கருத்துகள் கற்பிக்கப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களிடம் விமர்சன பூர்வமாக பார்க்கும் பார்வை, பகுத்தாய்ந்துப் பார்க்கும் தர்க்க முறை, அறிவியல் பூர்வக் கண்ணோட்டம் ஆகியவை தவறானவை என்ற எண்ணம் ஊட்டப்படுகின்றது; பாடமுறை, தேர்வுமுறை, ஆசிரியர்கள் மாணவர்களை நடத்தும் முறை அனைத்தும் ஏன், எப்படி என்ற கேள்விகள் கேட்டு பல கோணங்களில் சிந்தித்து, விவாதித்து சரியான முடிவை அடையும் செழுமையான, ஜனநாயக முறையாக இல்லை. மாறாக கேள்வி கேட்டாலே ஒடுக்குவதாக உள்ளது. இதனால் இளைய சமுதாயத்தினரின் அறிவு முளையிலேயே கருக்கப்பட்டு விடுகின்றது. தன்னம்பிக்கையையும், சுயசார்பில் நிற்கும் வசதியையும், துணிச்சலாக உலகத்தை எதிர் கொள்ளும் நம்பிக்கையையும் நமது கல்வியும் கற்பிக்கும் முறையும் சிதறடித்து அதிர்ஷ்டத்தை, கடவுளை நம்பும் குருட்டு நம்பிக்கையை வளர்க்கின்றன.

## 5. பெண்களின் நிலை

கல்வியிலிருந்து பெண்கள் வெகுதூரம் விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். பெண்களை இழிவுபடுத்தி பெண்ணடிமைத்தனத்தை நியாயப்படுத்துவதாகக் கல்விமுறை உள்ளது. இதிகாசங்களிலும் இலக்கியங்களிலும் காவியங்களிலும் தலைவிகளாக காண்பிக்கப்படும் பெண்கள் கற்பு, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பிற்கு இலக்கணமாக திகழ்பவர்கள்; சுயமாக சிந்திக்கும் திறனற்றவர்கள்; ஆண்களின் விருப்பத்திற்கான போகப் பொருட்கள்; அலங்காரப் பதுமைகள்; இத்தகைய பெண்களே கற்புள்ள பெண்கள் என்று சித்தரிக்கப்படுகிறார்கள். பெண்களின் உள்ளார்ந்த ஆற்றல் சிதைக்கப்பட்டு சரிபாதி மக்களின் அறிவும், ஆற்றலும் அடுப்பறைகளுக்குள் புதைக்கப்பட்டு வருகின்றன.

## 6. கல்வி நிறுவன கட்டணக் கொள்ளை

எல்லோருக்கும் கல்வி என்பது இப்போது காசு கொடுத்து வாங்கும் உயர்தர கடைச்சரக்காகி விட்டது. எல்லோருக்கும் வேலை என்பதை ஏற்க மறுக்கும் அரசு எல்லோருக்கும் கல்வி என்பதையும், புதிய கல்விக் கொள்கையின் ஓர் அம்சமான சுயநிதி கல்வி நிறுவனங்கள் மூலம் மறுத்துவிட்டது. கள்ளச் சாராய அதிபர்கள், கடத்தல் பேர்வழிகள், மாஃபியா கும்பல்கள், ஊழலில் புழுத்த ஓட்டுச் சீட்டு அரசியல்வாதிகள் சமூக அந்தஸ்து தேடிக் கொள்ளவும், சட்டபூர்வமாகக் கொள்ளையைத் தொடரவும் சுயநிதிக் கல்வி நிறுவனங்கள் கருவிகளாக இயங்கி வருகின்றன. இங்கேயும் இவர்கள் செய்யும் தில்லுமுல்லுகளால் பல ஆயிரம் மாணவர்கள், கட்டிய பணத்தையும் இழந்து கல்வியும் பெற முடியாமல் நடுத்தெருவில் வீசப்படுவதைப் பார்க்கிறோம்.

தேர்வுக் கட்டணம், படிப்புக் கட்டணம், நூலகக் கட்டணம், உணவு விடுதிக் கட்டணம் ஆகியவை ஆண்டுக்கு ஆண்டு ஏறி குரல்வளையை நெறிக்கின்றது. கல்விக்காக அரசு ஒதுக்கும் நிதியின் அளவு பெருகும் தேவைகளுக்கு குறைவாகவே உள்ளது. அதிலும் பெரும்பகுதி ஆசிரியர்களின் சம்பளத்திற்கே போய்விடுவதால் செலவினங்களை ஈடுகட்ட மாணவர்கள் தலையில் பள்ளி, கல்லூரி நிர்வாகங்கள் தண்டத் தீர்வை தீட்டுகின்றன. பாடப் புத்தகங்கள், இராசாயனப் பொருட்கள், சோதனைச்சாலை உபகரணங்கள் ஆகியவைகளின் விலையேற்றமும் படிப்புக் கட்டணத்தை உயர்த்தி வருகின்றன.

படித்த இளைஞர்களைப் பொருத்தவரை வியாபாரக் கல்விக்கு செலவழித் தக் கடனை ஈடுகட்ட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உள்ளது. அரசு வேலை என்பது குதிரைக் கொம்பாக மாறி விட்டதால், அன்றாடம் விளம்பரத்தைத் தேடி வேலைக்கு விண்ணப்பம் போட்டு ஏக்கத்தோடு அலைய வேண்டியுள் ளது. மாறி மாறி வேலைக்கான தேர்வு எழுதவும், தேர்வுக் கட்டணம், போக்குவரத்துச் செலவு என படிப்பு முடிந்த பின்னரும் கடன்பட்டு நெருக்கடிக்கு ஆளாக வேண்டிய நிலை உள்ளது. தெரிந்த இடைத்தரகர் என்று வேலைக்குப் பணத்தைக் கொடுத்து வேலையும் கிடைக்காமல் கொடுத்த பணத்தையும் திரும்பப் பெற முடியாமல் அவதிப்படுவதும் உள்ளது.

பள்ளி கல்லூரிகளில் பெற்றோர் - ஆசிரியர் கழகங்களை வைத்துக் கொண்டு கட்டிட நிதி, சிறப்பு நிதி என்று வசூலித்து, எவ்விதக் கட்டிடமும் கட்டாமல் கொள்ளையடிப்பது நடந்து வருகிறது. ஆசிரியர் - பெற்றோர் கழகத் தேர்தல்கள் ஜனநாயகப் பூர்வமாக நடப்பதில்லை. ஆதிக்க சாதியினரும் பணக்காரர்களும் தான் இவற்றில் அதிகாரத்தில் இருக்கின்றனர். இவைகள் பள்ளி, கல்லூரி நிர்வாகங்களின் பினாமிகளாகவே செயல்படுகின்றன.

வெளிநாடுகளில் வேலைக்கு ஆட்கள் தேவை என்ற விளம்பரத்தைப் பார்த்து விட்டு பல மோசடி நிறுவனங்களிடம் பணம் கட்டி, ஏமாந்து குடும்பமே திவாலாகும் நிலையில் பல படித்த மாணவர்கள் விரக்தியின் எல்லைக்கே தள்ளப்படுகிறார்கள்.

அற்ப சொற்பமான சாதாரண வேலைக்கே இன்று இலட்சக் கணக்கில் இலஞ்சம் தர வேண்டியுள்ளது. படிப்பதும் வேலை வாங்குவதும் இன்று பணக்காரர்களின் உரிமையாக மட்டும் மாறிவிட்டது. இதனால் ஆரம்பக் கல்வி வரை, அதிகபட்சம் போனால் மேல்நிலைப் பள்ளிவரை தங்கள் கல்வியை நிறுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தொழிலாளர்கள், விவசாயிகள், உதிரித் தொழிலாளர்களின் வீட்டு மாணவர்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் - இளைஞர்கள் சமுதாயத்திற்கு பொதுவாக இந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் ஆணாதிக்கம், குறைந்த கூலி, பாலியல் பலாத்காரம் போன்றவற்றால் பெண்கள் கூடுதலான கொடுமைக்கு ஆளாகியுள்ளனர்.

## 7. துள்ளும் இளமையை துவளச் செய்யும் சமூகம்

படிக்க வைத்து வேதனைப்படுவதை விட இப்போதே வேலையில் சேர்த்தால், பையனுக்கும் ஒரு வேலை உத்தரவாதமாகும்; நமக்கும் குடும்பத்தை ஓட்ட கொஞ்சம் பணம் கிடைக்கும் என்று கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள் தங்களை சமாதானப்படுத்திக் கொண்டு தங்கள் குழந்தைகளை இளம் வயதிலேயே வேலைக்கு அனுப்புகின்றனர். கிராமப்புறமாக இருந்தால் ஆடு, மாடு மேய்ப்பது, விவசாய, நெசவு வேலைகளில் ஈடுபடுவது; நகர்ப்புறமாக இருந்தால் ஓட்டல் வேலை, தீப்பெட்டி தொழிற்சாலை வேலை, பட்டாசுத் தொழில், லாட்டரி விற்பனை, பட்டறை வேலை என பல வேலைகளில் சிறார்களும் இளைஞர்களும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். கடுமையான, ஆபத்தான, உத்திரவாதமற்ற, குறைந்த கூலி கொண்ட தொழில்களில் இலட்சக் கணக்கான இளைஞர்கள் (பெண்கள் உட்பட) வேலை செய்து கொண்டிருக்கின்றனர். முதலாளிகள், மேலாளர்கள், கூட்டாளிகளின் ஏச்சையும் அடக்குமுறையையும், மோசமாக நடத்தப்படுவதையும் குறைந்த கூலியையும், எந்த நேரமும் வெளியேற்றப்படும் அபாயத்தையும் எண்ணி கோபமும், ஆத்திரம் கொண்டாலும் சகித்துக் கொண்டு காலம் தள்ளுகின்றனர்.

இளம் வயதிலேயே சுமத்தப்படும் குடும்ப பாரம், சகோதரிகளின் திருமண வரதட்சணை, கடன் போன்ற நிர்ப்பந்தங்கள் எந்த வேலை கிடைத்தாலும் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்துகிறது. பிடித்த வேலை, போதுமான கல்வி, நியாயமான உழைப்பு நேரம் போன்றவற்றை

இங்கே எதிர்பார்க்க முடியாது. பொழுதுபோக்கு என்பது ஆடம்பரமாக இவர்களுக்கு மாறி விடுகிறது. குறைந்தபட்ச இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆவல், சாதனைகளில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வம், மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற விருப்பம் அனைத்தையும் - துள்ளும் இளமையை இந்த வாழ்க்கைச் சுமை துவளச் செய்து விடுகிறது.

பாக்கெட்டில் ஏதுமில்லாமல் நண்பர்களுடன் சம அந்தஸ்துடன் பழக கூச்சமாக இருக்கிறது. தனது தகுதிக்கு ஏற்ற நட்புக்கு இளைஞர்கள் ஏங்குகின்றனர். கிடைக்காத பலர் தனிமைப்படுத்தப்பட்டதாக எண்ணி வாடு கின்றனர். நல்ல பொருட்கள், துணிகள்கூட வாங்க முடியாமல் ஏங்குகிறார்கள். இந்த மாதிரியான விரக்தி நிலையில் போலியான நட்பை' நாடி மேல்நாட்டு நாகரிக விரும்பிகளாக திடீரென்று மாறுகின்றனர்.

இளமைக் காலத்தில் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவியல், கலை, வரலாறு, விளையாட்டு போன்ற பல செய்திகளும் தெரியாமலேயே இளைஞர்க ளின் இளமைக் காலம் பாழாகி விடுகின்றது.

உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டிய இந்த வயதில் இவ்வாறு நடத்தப்படுவதால் விரக்தியும் இந்தச் சமுதாயத்தின் மீதே ஆத்திரமும் கொண்டு சமூக விரோதச் செயலுக்கு இளைஞர்கள் தள்ளப்படுகின்றனர்; மாஃபியா கும்பல்கள், கடத்தல், கள்ளச் சாராய கும்பல்கள், ஓட்டுச் சீட்டு அரசியல் ரவுடிகள் ஆகியோரும் தங்களது கேடான நோக்கங்களுக்கு இளைஞர்களை இழுக்கின்றனர்; சுலபமாகப் பணம் சம்பாதிக்க முடிவதாலும் ஒருவித 'சாகச' மகிழ்ச்சியில் இருப்பதாலும் இளைஞர்கள் சமூக விரோதச் செயல்களுக்கு ஈர்க்கப்படுகிறார்கள்.

சோகம், வெறுப்பு, ஆத்திரம், நிச்சயமற்ற எதிர்காலம் போன்றவைகள் இளைஞர்களின் இளமையை அரித்து தின்று கொண்டிருக்கின்றன. இத்துடன் குடும்பப் பொறுப்பும் சேர்ந்து மேலும் அவர்களை எழவிடாமல் அமுக்கி விடுகின்றது; அவர்களது ஆசைகளெல்லாம் நிரந்தர நிராசைகளாகி வாழ்நாள் கழிந்து விடுகின்றது.

தவறான திசையிலும் இளமைக் காலம் பாழாகிறது. முழுப் போதையால் சிந்தனை கெடுவது; கஞ்சா, சாராயம் என மூழ்கிக் கிடப்பது; தெருவோரத் தகராறில் ஈடுபட்டுக் கைகால்கள் உடைவது, உடல் உறுப்புகள் வீங்கிப் போவது, போலீஸ்காரர்களின் அவமரியாதைக்கும் அடி உதைக்கும் ஆளாவது; ஓட்டுக் கட்சிகளுக்காக ஒருவருக்கொருவர் தாக்கிக் கொண்டு அடிபடுவதும் நடக்கிறது.

## 8. மாணவர்கள் - இளைஞர்கள் மீதான சீரழிவு, பிற்போக்கு சக்திகளின் ஆதிக்கம்

ஆபாசப் பத்திரிக்கைகளும் திரைப்படங்களும் புற்றீசல் போலப் பெருகி வருகின்றது. ஆங்கிலப் படங்களைக் காட்டிலும், ஆபாசமான, தனிமனித வன்முறை, சாகச, வக்கிரத் தனத்தைத் தூண்டிவிடும் படங்கள் தமிழகத்தில்

தயாரிக்கப்படுகின்றன. பீதியையும், கோழைத்தனத்தையும் ஊட்டி, ஒதுங்கும் போக்கை வளர்க்கும் திரைப்படங்களும், விட்டேத்தியான சிந்தனையை வளர்க்கும் திரைப்படங்களும், தேசபக்தி என்ற பெயரில் மக்களின் நியாயமான போராட்டங்களை எதிர்க்கும் திரைப்படங்களும் அண்மைக் காலங்களில் மாணவர்கள் - இளைஞர்களின் பார்வைக்கு வந்துள்ளன. முதிர்ச்சியுறாப் பருவத்திலேயே காதலிக்கும் சிறுவர்களைப் பற்றி படமெடுத்து, அதற்கு தெய்வீக முத்திரையைக் குத்தி "சிறந்த" கலைப்படமென்ற பாராட்டையும் பெற்றுக் கொள்ளும் திரைப்படங்களால் மாணவர்கள் இளம் பிராயத்திலேயே சீரழிக்கப்படுகிறார்கள். எதையும் விரைந்து பற்றிக் கொள்ளும் இளைஞர்களிடையே 'நாகரிகம்' என்ற பெயரில் புகை பிடித்தல், போதைப் பழக்கவழக்கங்கள் பரப்பி விடப்பட்டுள்ளன. இவற்றின் மீது மோகத்தை வளர்ப்பதாகவே திரைப்படங்களும், செய்தித் தொடர்பு நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்களும் பள்ளி, கல்லூரிகளைச் சுற்றி ஒட்டப்படும் விளம்பரங்களும் விற்கப்படும் சரக்குகளும் அரசுக்குத் தெரியாததல்ல.

மாணவர்கள் - இளைஞர்களைச் சீரழிக்கும் இவைகளை எதிர்த்தோ, மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகவோ எந்த ஓட்டுச் சீட்டு அரசியல் கட்சியும் போராடுவதில்லை. இந்தக் கட்சிகளும் வேறு எந்த நிறுவனங்களும் மாணவர்கள் - இளைஞர்களை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. ஓட்டுச் சீட்டு கட்சிகள் மாணவர்கள் - இளைஞர்களை தமது அரசியலுக்கு பகடைக் காய்களாக மட்டுமே பயன்படுத்துகின்றன. தங்களது அனைத்து அயோக்கியத்தனங்களையும் மாணவர்கள் - இளைஞர்கள் மத்தியில் புகுத்தி தங்கள் பங்கிற்கு அவர்களைச் சீரழிக்கின்றன. போதாக்குறைக்கு சாதி, மதவெறி இயக்கங்கள் மாணவர்கள் - இளைஞர்களை வெறியூட்டி மோத விடுகின்றன. ஏ.பி.வி.பி (ABVP- அகில பாரத வித்யார்த்தி பரிஷத்) பஜ்ரங்தள் போன்ற இந்து மதவெறியூட்டப்பட்ட மாணவர் - இளைஞர் அமைப்புகளும், எஸ்.ஐ.ஓ (SIO ஸ்டூடண்ட் இஸ்லாமிக் ஆர்கனைசேஷன்) போன்ற முஸ்லீம் மதவாத மாணவர் அமைப்புகளும் மத அடிப்படையில் மாணவர்களையும் இளைஞர்களையும் பிளவுபடுத்தி தமது கேடான அரசியல் நோக்கங்களுக்கு அவர்களை பலியாக்கி வருகின்றன.

இவையன்றி, ஐகஃப் (AICUF- ஆல் இண்டியா கத்தோலிக் யுனிவர்சிட்சி ஃபெடெரேசன்) போன்ற ஏகாதிபத்திய தொண்டூழிய நிறுவனங்கள் சமூக உணர்வூட்டுதல் பெயரில் மாணவர்களின் சிந்தனையை ஊழல்படுத்துகின்றன.

## 9. மாணவர்கள் - இளைஞர்களைச் சீரழிக்கும் சமுதாயம்

துடிப்பும் படைப்பாற்றலும் கொண்ட அறிவுச் செல்வங்களான மாணவர்கள் - இளைஞர்களை மிகவும் அக்கறை எடுத்து வளர்க்க வேண்டிய அரசும், சமுதாயமும் அவர்களைச் சீரழிக்கும் சக்திகளையே ஊட்டி வளர்க்கின்றன. ஆபாசம், வக்கிரம், ஒதுங்கும் போக்கு, தனிமனிதப் பழிதீர்க்கும் வன்முறை, விட்டேத்தியான சிந்தனை, சமூகப் பொறுப்பற்ற தன்மை, ஒழுக்கச் சீர்கேடு

களை தூண்டி விடுதல், முதிர்ச்சியுறா பருவக் 'காதல்', குடி, போதை, புகைப்பிடித்தல், அராஜகம், ரவுடித்தனம், பெண்களைக் கேலி செய்தல் போன்றவற்றை நாகரீகமாகவும் சூரத்தனமாகவும் சித்தரித்தல், ஆடம்பர மோகம் ஆகிய நஞ்சுகளை ஊட்டுகின்ற பத்திரிகைகளும், திரைப்படங்களும், வானொளிகளும் தாராளமாக அனுமதிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள், இளை ஞர்களை சீரழிக்கும் இவைகள் பத்திரிகை, திரைப்பட முதலாளிகளின் இலாப வெறிக்காகவே நடத்தப்படுகின்றன.

இலாப வேட்டைக்கான கருவிகளாக மாற்றப்பட்டுவிட்ட விளையாட்டுத் துறை வீரர்கள் திட்டமிட்டு கதாநாயகர்களாக உருவாக்கப்பட்டு அவர்களின் ரசிகர்களாக மாணவர்கள் - இளைஞர்கள் சீரழிக்கப்படுகின்றனர்.

விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்களுக்கும், நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கும் இல்லாத மரியாதையும் செல்வாக்கும் விளம்பரமும் திரைப்பட நடிகர்கள், விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படுகி றது.

இலஞ்சத்திலும் ஊழலிலும் திளைக்கும் அரசியல்வாதிகளும் அதிகார வர்க்கத்தினரும் இளைய தலைமுறையை சீரழித்து தேசத் துரோக செயல்களில் ஈடுபட ஊக்கமும் பாதுகாப்பும் அளித்து வருகின்றனர். தங்களது லாப வெறி, ஊழல், இலஞ்சம், கிரிமினல் அயோக்கியத்தனங்கள் ஆகியவற்றிற்கு எதிராகப் போராடாமல் மாணவர்கள் - இளைஞர்களை மழுங்கடித்துள்ளனர். திட்ட மிட்டே இவ்வேலையைச் செய்து வருகின்றனர். மேலும் தமது ஓட்டு சேகரிக்கும் நோக்கத்திற்கு மாணவர்கள் - இளைஞர்களைப் பகடைக்காயாக பயன்படுத்தியும் சீரழிக்கின்றனர். அதேசமயம், மாணவர்களும் - இளைஞர்க ளும் நாட்டு நலன், சமுதாய நலன் என்கிற கண்ணோட்டத்தில் சரியான அரசியலில் இறங்குவதை தடுப்பதற்காக 'அரசியல் கூடாது' என்று நைச்சிய மாக பிரச்சாரமும் செய்து விடுகின்றனர்.

இன்னொருபக்கம் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., இந்து முன்னணி, ஏ.பி.வி.பி. (ABVP- அகில பாரத விதியார்த்தி பரிஷத்) எஸ்.ஐ.ஓ (SIO- ஸ்டுடண்ட் இஸ்லாமிக் ஆர்கணைசேஷன்) அல் உம்மா போன்ற மதவெறி பாசிச அமைப்புகளும் பல்வேறு ஆதிக்க சாதிய சக்திகளும் மாணவர்களையும் இளைஞர்களையும் குறுகிய, பிற்போக்குத்தனமான சாதி, மதவெறிக்கு உட்ப டுத்தி அவர்களைப் பிளவுப்படுத்தி மோதவிட்டு தமது அரசியல் நோக்கங்க ளுக்கு பயன்படுத்தி வருகின்றன.

இவைகளினால் பாதிக்கப்பட்டு, பலியாகியுள்ளது மாணவர் - இளைஞர் சமுதாயம். இதனால் இவர்களின் ஆக்கபூர்வமான படைப்பாற்றலும், இளமைத் துடிப்பும், சுதந்திரமான சிந்தனையும், நாட்டுப்பற்றும், சமூக உணர்வும் அழிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளையில் அதிகாரிகள், பெரும் வியாபாரிகள், முதலாளிகள், நிலக்கிழார்கள், அரசியல் தலைவர்கள், சினிமாக்காரர்கள் ஆகியோரின் வீட்டுப் பிள்ளைகள் ஆடம்பரமாக உடை உடுத்திக் கொண்டு, ஊதாரித்தனமாக செலவு

செய்து கொண்டு, படிக்காமலேயே பணபலத்தாலும் சமூகத் தொடர்புகளாலும் தேர்ச்சி பெற்று விடுகின்றனர். அவர்கள் போல நாமும் உல்லாசமாகத் திரிய வேண்டும் என்ற எண்ணத்திற்கு பலியான நடுத்தர வசதியுள்ள மற்றும் சாதாரண வசதியுள்ள வீட்டுப் பிள்ளைகள் பெற்றோர்களிடமிருந்து பொய் சொல்லி பணம் பெற்றோ, திருடியோ, ஆடம்பரமாகவும், உல்லாசமாகவும் வாழப் போட்டியிடுகின்றனர். இதன் காரணமாக விட்டேத்திகளாக, ஊதாரிக ளாக மாறி பெற்றோர்களுக்கு பெரும் சுமையாவதுடன் இறுதியில் உல்லாசமாக வாழ சமூக விரோத நடவடிக்கைகளுக்கும் பழக்கங்களுக்கும் தள்ளப்பட்டு சீரழிகின்றனர்.

இதனால் பெற்றோர்களும் சமூகமும் கூட மாணவர்களைப் பொறுப்பற்ற வர்களாகவும் அராஜகம் செய்யும் கூட்டமாகவும் தான் கருதி நடத்துகின்றனர். மாணவர்களை மதித்து அவர்களின் கருத்துகளைக் கேட்பதில்லை; இவர்களுக்கு என்ன தெரியும்? என்று மிக அலட்சியமாக ஒதுக்கித் தள்ளுகிறார்கள். திரைப்படங்களில் கூட சமூகப் பொறுப்பற்ற விட்டேத்திகளாகவும் பெண்களை கேலி செய்து திரியும் பொறுக்கிகளாகவும் தான் சித்தரிக்கப்படுகின்றனர். ஆனால் வரலாற்றையே மாற்றக் கூடிய அறிவும் ஆற்றலும் பொருந்தியவர்கள் மாணவர்கள்; மாணவர்களை சமூகமே புறக்கணித்து தவறாகச் சித்தரிப்பது தவறாக நடப்பதற்கு மாணவர்களைத் தூண்டி விடுவது போல் இருக்கின்றது.

இன்னொரு பக்கம் கல்லூரி நிர்வாகங்களோ, பல்கலைக் கழகங்களோ மாணவர்களை கற்றுக் கொள்ளும் இயந்திரமாக மட்டுமே பார்க்கின்றன. பாடத் திட்டம் வகுத்தல், தேர்வு முறைகள், கல்வி கற்பிக்கப்படும் முறைகள், விடுதிவசதிகள், கல்விக் கட்டணம் போன்றவற்றைத் தீர்மானிப்பதில் மாணவர் களை ஒரு பொருட்டாக மதித்து கருத்து கேட்டதில்லை; பல்கலைக் கழக செனட் போன்ற மன்றங்களில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்ப தில்லை.

எனினும் மாணவர்கள் இதற்கெல்லாம் பலியாகாமல் தங்களது அறிவுத் திறனையும் இளமைத் துடிப்பையும் படைப்பாற்றலையும் ஆக்கபூர்வமான பாதையில் செலுத்துவதற்கு ஏற்பப் பரந்த சமூகப் பார்வையைப் பெற வேண்டும். பொதுநல நோக்கும் தேசப்பற்றும் கொண்டு மக்களுக்காகவும் நாட்டிற்காகவும் தியாகம் செய்யவே கற்க வந்திருக்கிறோம் என்ற உணர்வுடன் உழைக்கும் மக்களுடன் வேறுபாடோ, விரோதமோ பாராட்டாது இணைந்து பாடுபட முன்வர வேண்டும். அதற்கான சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## 10. மாணவர்கள் - இளைஞர்களிடம் உள்ள சில தவறான கருத்துகள்

அரசியலில் ஈடுபடக் கூடாது என்ற ஒரு தவறான கருத்து மாணவர்களி டையே உள்ளது. படிப்பு உண்டு, நாமுண்டு என இருக்க வேண்டுமென்று கருதுகின்றனர். எதிர்கால தலைவிதியைத் தீர்மானிக்கும் அரசியலில் பங்கெ டுக்க வேண்டியது ஒவ்வொரு குடிமகனுக்கும் அவசியமாகும். படிப்பில்

கவனம் செலுத்திக் கொண்டே மாணவர்கள் அரசியலிலும் தேவையான அளவு ஈடுபடுவதே சரியானதாகும்.

மாணவர்கள் தங்களுக்கென சங்கம் வைப்பதும் கோரிக்கைகளுக்காகப் போராடுவதும் சரியானதும் இயற்கையானதுமாகும். அப்படி சங்கம் வைத்துப் போராடினால் கல்லூரி நிர்வாகம் தம்மை பழிவாங்கும் என்ற பயமும் ''சங்கம் எதற்கு, நமது படிப்பை நாம் பார்ப்போம்'' என்ற பொறுப்பற்ற விட்டேத்தித்தன மும் பல மாணவர்களிடம் வெளிப்படுகின்றது. மாணவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளுக்காக ஒன்று திரண்டு போராடுவது நியாயமான ஒன்றாகும்; பாராமுகமாக இருப்பதும் பயந்து கொண்டு ஒதுங்குவதும் அக்கிரமத்திற்கும் பகல் கொள்ளைக்கும் அடாவடித்தனத்திற்கும் ஊக்கம் அளிப்பதாகும். கற்றல் என்பது வெறுமனே சூத்திரங்களையும் நுட்பங்களையும் விதிகளையும் மனப்பா டம் செய்வதல்ல; உலகை மாற்றுவதற்கே மனிதன் கற்கின்றான்; எனவே, மாணவர்கள் தங்களை எதிர்கொள்கின்ற தடைகள், அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடுவது மட்டுமல்ல; சமுதாயத்தில் நிலவும் அக்கிரமங்கள், அநியாயங்கள், அடக்குமுறைகள் ஆகியவற்றிற்கு எதிராகப் போராடுவதும் மிகவும் அவசியமானதும் இயல்பானதும் ஆகும்.

ஆங்கிலம் தெரிந்தால்தான் அறிவாளி; இந்தி தெரிந்தால் தான் வேலை வாய்ப்பு என்ற இன்னொரு தவறான நம்பிக்கையும் மாணவர்கள் மத்தியில் நிலவுகின்றது; ஆங்கிலத்தையும் இந்தியையும் எதிர்த்துப் பேசினால் நாம் தனிமைப்பட்டு விடுவோமோ என்ற அச்சமும் கலக்கமும் சில மாணவர்களிடம் நிலவுகின்றது. தாய்மொழியில் கற்பது மூலமே அறிவுத் திறன் பெருகுகின்றது என்று உலகம் முழுதும் ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிற காலமிது; இந்தி பேசும் மாநிலங்களிலேயே வேலையில்லாத் திண்டாட்டமும் மண்ணின் மைந்தருக்கே வேலை என்ற கொள்கையும் நிலவுகின்றன. இந்த உண்மைகள் இந்தி படித்தால் வேலை என்ற பிரமையை உடைத்தெறிந்து விடுகின்றன.

படித்து முடித்து விட்டு வெளிநாடு சென்று நிறைய பொருளீட்டி மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற கருத்தும் பல மாணவர்களிடம் உள்ளது. மக்களின் வரிப்பணத்தில் ஏறத்தாழ இலட்ச ரூபாயை பட்டப்படிப்பு படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் அரசு செலவழிக்கிறது; மருத்துவம், பொறியியல் படிப்புகளில் இது இரண்டு, மூன்று இலட்சங்களாக இருக்கின்றது; இப்படியிருக்க படித்து விட்டு தனது தன்னல மகிழ்ச்சிக்காக வெளிநாட்டுக்கு சேவை செய்ய எண்ணுவது தேசத் துரோகமாகும்; மாறாக, தாய்நாட்டிற்கு உழைப்பதைப் பற்றி சிந்தித்துச் செயல்பட வேண்டும்; அதற்கான வாய்ப்பு, அரசியல் சூழ்நிலை இங்கில்லை; ஏன் வேலையே இங்கு இல்லை என்ற நிலைமை இருப்பது உண்மைதான். இங்கு எப்படி வாழ்வது என்று கேட்பதை நிறுத்தி விட்டு, இந்தச் சூழ்நிலையை மாற்றி எப்படி தாய்நாட்டிற்கு சேவை செய்வது என்று சிந்தித்துச் செயல்படுவதே சரியானதாகும்.

# 11. இந்தியா மீண்டும் காலனியாவதால் பெருகி வரும் வேலையின்மை

ஏறத்தாழ பத்து கோடி இளைஞர்கள் இன்று இந்தியாவில் வேலையின்றி தவிக்கின்றனர். ஏதாவது ஒரு வேலையில் இருப்பவர்கள் கூட படிப்புக்கேற்ற வேலையின்றியும் வேலைக்கேற்றக் கூலியின்றியும் தான் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர். தங்களைச் சோம்பேறி என்று பிறர் கருதி விடக்கூடாது என்பதற்காகப் பயனற்ற வேலைகளில் பலர் ஒட்டிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இவர்களையும் சேர்த்தால் சுமார் 15 கோடி பேருக்கு இந்தியாவில் உருப்படியான வேலையில்லை என்றே சொல்ல வேண்டும்.

வேலையின்மையைப் போக்குவதற்கான அரசின் கொள்கைகளும் திட்டங் களும் ஒட்டுப் பொறுக்குவதற்கான கடைசிகட்ட முயற்சிகளாகவே உள்ளன. இலஞ்ச, ஊழல்களில் ஈடுபட்டு அரசாங்க சன்மானங்களைக் கொள்ளையிடப் போட்டி போடும் எல்லா ஓட்டுக் கட்சிகளும் அதிகார வர்க்கத்தினரும் வேலையில்லாததற்கான பழியை மாணவர்கள் - இளைஞர்கள் மீதும் மக்கள் மீதும் சுமத்துகின்றனர். மக்கட்தொகை பெருக்கம், சுயதொழிலில் ஈடுபட இளைஞர்களிடம் ஆக்கமின்மை, உழைக்காமலேயே சம்பாதிக்கலாம் என்ற சோம்பேறி மனப்பான்மை என்று பலவாறு பொய்ப் பிரச்சாரம் செய்கின்றனர். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பைத் தட்டிக் கழிக்கவும் போராடுபவர்களை ஒடுக்கவுமே அரசும் ஓட்டுக் கட்சிகளும் இவ்வாறு தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றன.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கூறுகளைக் கொண்ட புதிய பொருளாதாரக் கொள்கையை அரசாங்கம் அமுல்படுத்தி வருகின்றது. அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான், ரசியா போன்ற மேல்நிலை வல்லரசுகளின் உத்திரவுப்படி இக்கொள்கை அமுல்படுத்தப்படுகிறது. இவ்வல்லரசுகளுக்கு இந்தியாவை மீண்டும் காலனியாக்கும் இக்கொள்கையின் விளைவாக வெளி நாட்டு, தனியார், பன்னாட்டு தொழிற் கழகங்கள், தேசங்கடந்த தொழிற் கழகங்கள், மற்றும் உள்நாட்டு தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் இலாபக் குவிப்பிற்கு இந்தியாவின் பொருளாதாரம் தாராளமாக திறந்து விடப்பட்டிருக்கி றது. இதனால் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் வீதிக்கு விரட்டப்படுவ தோடு, புதிய வேலை வாய்ப்பு விகிதமும் குறைந்து வருகின்றது.

பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு, தொழிற்படிப்பு போன்ற படிப்பு படித்த கிட்டதட்ட 350 இலட்சத்திற்கும் அதிகமானோர் நாடு முழுவதிலும் வேலையில் லாத் திண்டாட்டத்தில் உழன்று வருகின்றனர். தொடர்ந்து நட்டமடைவதால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் தவிக்கின்றனர். கைத்தறி, விசைத்தறி, பஞ்சாலைகள், எஞ்சினீயரிங் தொழிற்சாலைகள் உட்பட பல ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன; ஓய்வு பெறும் வயதை 60 ஆக மைய அரசு கூட்டி விட்டது. மைய அரசு வேலைக்கு புதிதாக ஆட்களை எடுப்பது உலக வங்கி உத்திரவால் நிறுத்தப்பட்டு விட்டது.

வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவும் வீக்கமும் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

இந்நிலை ஒரே வீட்டில் படித்த மகனுக்கும் வேலை இல்லை; வேலைக்குச் சென்ற தந்தைக்கும் வேலை பறிபோய் விட்டது என்ற நிலை உருவாக்கியுள் ளது. மாணவர்கள் - இளைஞர்களின் எதிர்காலம் சூனியமாகிவிட்டது. தனது அத்தியாவசிய செலவிற்கே கூட குடும்பத்தைச் சார்ந்து வாழ வேண்டியவர்க ளாக அவர்களை ஆக்கி விட்டது. தனது பெற்றோருக்குப் பின் வாழ வழியற்றவனாக சமுதாயம் அவனை ஆக்கிவிட்டது. குப்பையில் வீசப்பட்ட மாணிக்கங்கள் போல மாணவர்களும் இளைஞர்களும் சமுதாயத்தால் பயன்ப டுத்தப்படாமல் ஒளியிழந்து, சோர்வுற்று செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள்.

## 12. இட ஒதுக்கீடும் மண்டல் பரிந்துரைகளும்

பார்ப்பனிய இந்துமத அடிப்படையிலான சாதி-தீண்டாமை ஒடுக்குமுறை நிலவுவது காரணமாக அவற்றை நியாயப்படுத்தும் சித்தாந்தங்களும் நடைமு றையில் உள்ளன. சாதி-தீண்டாமை கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களை அடக்குகின்ற அரசு எந்திரத்தில் பங்கு பெற வைத்து அவர்களைச் சாந்தப்படுத்த வும், நாமும் ஆளும் வர்க்கமாக மாறிவிட்டோம் என்ற திருப்தியை ஏற்படுத்தவும்தான் இட ஒதுக்கீடும் மண்டல் குழு பரிந்துரைகளும் கொண்டு வரப்பட்டன. தாழ்த்தப்பட்ட மக்கட் பிரிவினருக்கும் சேவை சாதியினருக்கும் இட ஒதுக்கீடு நியாயமானதாகும். எனினும் பிற்பட்ட வகுப்பினர் என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்களை ஆதிக்கம் செய்து வரும் மேல் சாதியிலுள்ள மேல்தட்டு மக்களுக்கே இட ஒதுக்கீடு பெரிதும் பலனளித்துள்ளது. இட ஒதுக்கீட்டினால் தகுதியும் திறமையும் பின்னுக்கு தள்ளப்பட்டு நிர்வாகம் சீர்கெட்டு விட்டது என்று கூறி பார்ப்பன - பனியா மேல்சாதி பிரிவினர் நயவஞ்சகமாக இட ஒதுக்கீடு, மண்டல் குழு பரிந்துரைகளை எதிர்க்கின்றனர். இவ்விரு பிரிவினரின் நோக்கங்களையும் இட ஒதுக்கீட்டிற்கான அரசின் நோக்கத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## 13. இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடம்: எங்கும் பார்ப்பனியமயமாக்கம்

இந்தியா பல்வேறு தேசிய இனங்கள் கொண்ட நாடு; தனது பண்பாடு, கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றை சொந்தமாக தீர்மானித்துக் கொள்ள ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரிமை இருக்க வேண்டும்; ஒவ்வொன்றும் சமமாக நடத்தப்பட வேண்டும். அந்தந்த தேசிய இனத்து மாணவர்கள் தங்களது தேசிய மொழியில் கல்வியின் எல்லா மட்டங்களிலும் கல்வி கற்க உரிமை பெற்றிருக்க வேண்டும். தாய்மொழி வழிக்கல்வி படித்தவர்களுக்கு அந்தந்த தேசிய பிராந்தியத்தில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். இந்தியாவில் ஒடுக்குகிற பெரிய தேசிய இனம் என்று ஒன்று தனியாக இல்லை. ஒன்றுபட்ட இந்தியா என்ற பெரிய ஆற்றலை சிதறாமல் காக்க, டாட்டா, பிர்லா போன்ற தரகுப் பெரு முதலாளிகளும் ஏகாதிபத்தியங்க

ளும் விரும்புகின்றனர். அதற்காகவே தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் கடுமையாக ஒடுக்கப்படுகின்றன. இன்னொரு பக்கம் தார்மீக ரீதியாகவும் ஒடுக்குகின்றன. இந்தி - இந்து - இந்தியா என்ற சித்தாந்தம் மற்றும் பண்பாட்டு ஒடுக்குமுறை தேசிய இனங்களின் மீது திணிக்கப்பட்டுள்ளது. பார்ப்பன (இந்து) மதப் பண்பாடே இந்தியாவின் பண்பாடென்று திட்டமிட்டே அரசின் பிரச்சார சாதனங்கள், இலக்கியங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலம் சித்தரிக்கப்படுகிறது. இந்து - இந்தி - இந்தியா என்ற சித்தாந்தமே தேசிய ஒருமைப்பாட்டுச் சித்தாந்தமாக முன்வைக்கப்படுகிறது. இதை எதிர்ப்பவர்கள் மீது தேசத்துரோகி கள் என்று முத்திரை குத்தப்பட்டு ஒடுக்கப்படுகிறார்கள்.

இந்தி படித்தால் வேலை கிடைக்கும் என்ற அடிமைத்தனமான கருத்து பரப்பப்பட்டுள்ளது. இன்னொரு பக்கம் ஆங்கில மோகமும் திட்டமிட்டு திணிக்கப்படுவதை எதிர்த்து அனைத்து நிலையிலும் பயிற்று மொழியாகவும் அன்றாட நிர்வாக மொழியாகவும் தாய்மொழியாம் தமிழை நிலைநாட்டுவது மாணவர்கள் - இளைஞர்களின் கடமையாக உள்ளது.

உள்நாட்டு அரைநிலவுடமை உறவுகளாலும் பல்வேறு ஏகாதிபத்தியங்க ளின் சுரண்டலாலும் அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடிகளின் சுமையை ஆளும் வர்க்கங்கள் மக்கள் மீது சுமத்தி வருகின்றன. இதை எதிர்த்து மக்கள் நடத்தும் போராட்டங்களாலும் தேசிய இனப் போராட்டங்களாலும் பீதியடைந் துள்ள ஆளும் வர்க்கங்கள் ஒருபுறம், போராட்டங்களிலிருந்து மக்களை திசை திருப்ப ஆபாச சீரழிவுப்பண்பாட்டைத் திட்டமிட்டு பரப்புகின்றன. இன்னொரு புறம், தேசிய வெறியைக் கிளப்பி தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து என்று கூறி இந்து மதவெறியை அடிப்படையாகக் கொண்ட பாசிசத்தைக் கொண்டு வர, ஆர்.எஸ்.எஸ். தலைமையிலான பி.ஜே.பி. போன்ற இயக்கங்கள் திட்டமிட்டு வருகின்றன. இதே அடிப்படையில் காங்கிரசு தலைமையில், பாசிசத்தைக் கொண்டு வர காங்கிரசுக் கட்சியும் விரும்புகிறது. இதற்கு எதிராக குரல் கொடுப்போர் எல்லாம் பயங்கரவாதிகளாக, தீவிரவாதிகளாக, பிரிவினை வாதிகளாக, சமூக விரோதிகளாக சித்தரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்படுகின்ற னர்; ஒடுக்கப்படுகின்றனர்.

ஆபாச, போதைப் பழக்கங்களால் இளைய உள்ளங்களை முடமாக்குவது, போராடும் சக்திகளை மூளை மழுங்கச் செய்ய பீதியூட்டுவது, பிரித்து மோத விடுவது, ஒதுங்கும் போக்கை வளர்ப்பது, விட்டேத்தியாக்குவது, விலைக்கு வாங்குவது, சாதி, மத, தேசிய வெறியூட்டுவது போன்ற உத்திகளையெல்லாம் ஆளும் வர்க்கங்கள் கையாள்கின்றன. என்.எஸ்.ஏ. (N.S.A.) ராஜதுரோக வழக்குகளில் சிறைகளில் அடைத்தும், மோதலில் கொலை என்ற பெயரில் போலியான மோதல்களில் கைது செய்து சென்றவர்களை கொன்றும் வருகிறது அரசு. பாசிசத்தை மூர்க்கமாக அரங்கேற்ற பா.ஜ.க. கூட்டணி அரசு சீராகவும் நிதானமாகவும் செயல்பட்டு வருகின்றது. இப்போதே பல மாநிலங்கள் இராணுவத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டு விட்டது. இப்பகுதிகளில் ஊரடங்கே அன்றாட நடப்பாகியுள்ளது.

## 14. சீர்திருத்தங்கள் நிரந்தரத் தீர்வல்ல

ஒரு பக்கம் அடக்குமுறையை ஏவி விட்டுக் கொண்டே, இன்னொரு பக்கம் அரசானது மக்களின் போராட்டங்களையும் கோபத்தையும் சாந்தப்படுத்த அவ்வப்பொழுது சில சீர்திருத்தத் திட்டங்களை அறிவிப்பதோடு நின்றுவிடுகிறது. வேலையில்லாப் படித்த இளைஞர்களுக்கு உதவிப்பணம்; சுயவேலை வாய்ப்பிற்கு கடன் உதவி போன்ற சீர்திருத்த திட்டங்களும் கூட அதிகாரிகளின் மக்கள் விரோத மனப்பான்மை, அதிகாரிகள் - அரசியல்வாதிகள் புரோக்கர்கள் ஆகியோர்களின் இலஞ்சம், ஊழல், ஆகியவை காரணமாக அரைகுறை பெயரில்லாத திட்டங்களாகவே செயல்படுகின்றன. இவைகளினால் எந்த நிரந்தரமான தீர்வும் ஏற்படவே முடியாது.

## 15. அரைக்காலனிய-அரைநிலப்பிரபுத்துவ சமூக அமைப்பே பிரச்சினைகளுக்கான ஊற்றுக்கண்

விவசாயிகளின் நாடான இந்தியாவில் விவசாயத்தில் அரை நிலவுடைமை உறவுகளே பெரும்பான்மையாக நிலவுகின்றன. மூப்பனார், வாண்டையார் போன்ற பெரும் நிலப்பிரபுக்களின் கைகளில் 50%-க்கும் மேற்பட்ட நிலங்களும் மற்ற விவசாயிகளிடம் 50%-க்கும் குறைவான நிலங்களும் கூலி, ஏழை விவசாயிகளிடம் சிறிதளவு நிலங்களுமே உள்ளன. பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி என்ற பெயர்களில் புகுத்தப்பட்ட பல நவீன அபிவிருத்தித் திட்டங்கள் நகர்ப்புறங்களின் தேவைக்கு கிராமப்புறங்களை கூடுதலாகச் சுரண்டும் நோக்கம் கொண்டிருந்தன. உரம், பூச்சி மருந்து, டிராக்டர், விதைகள் ஆகியவற்றை விற்கும் வல்லரசு நாடுகளைச் சேர்ந்த தேசங்கடந்தத் தொழிற் கழகங்கள், அவற்றுடன் கூட்டு சேர்ந்துள்ள இந்திய தரகு அதிகார வர்க்க முதலாளிகள், அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் விவசாயியையும் கிராமப்புறத்தையும் சுரண்டுவதற்கே இத்திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. மொத்த கணக்கீட்டில் உற்பத்தி பெருகினாலும் விவசாயிகளின் நிலையோ மோசமாகிக் கொண்டே வந்தது. வேலையில்லாத் திண்டாட்டமும் விவசாயிகள் போண்டியாவதும் அதிகரித்தன. கட்டுப்படியாகாத விலை, உற்பத்தி செலவு அதிகரிப்பு, திடீர் திடீரென விலைகள் ஏறுவது, இறங்குவது, எந்த மருந்து அடித்தாலும் சாகாத புழுக்கள்; பூச்சிகளினால் வரும் புதுப்புது நோய்கள் காரணமாக விவசாயம் என்பது சூதாட்டமாக மாறிவிட்டது. காட் ஒப்பந்தத்தால் இந்திய விவசாயம் சர்வதேச சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதுவும் புதிய பொருளாதாரக் கொள்கையும் விவசாய வளத்தைக் கொள்ளையிட அமெரிக்கா, ஜெர்மனி போன்ற வல்லரசுகளுக்கு மேலும் கூடுதல் வாய்ப்பளித்துள்ளதால், பயிர் செய்தால் போட்ட முதலே மோசம் போய்விடும் என்ற நிலையாகி விட்டது. இதனால் பல விவசாயக் குடும்பங்கள் தற்கொலை செய்து கொள்வதோடு என்ன செய்வது என்று விக்கித்து போய் கையறு நிலையில் கலங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் உள்நாட்டு சந்தையும் தொடர்ந்து சுருங்கிக் கொண்டே வருகின்றது.

தொழிற்துறை மற்றும் எவ்வித உற்பத்திப் பொருட்களுக்கும் உள்நாட்டு சந்தை மிகவும் சுருங்கி போய்விட்டதால் அத்தொழில்கள் நெருக்கடிகளுக்கு ஆளாகின்றன. விவசாய உரிமையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகளின் நலன்களை உயர்த்தும் வகையில் விவசாயக் கொள்கை இல்லை. உள்நாட்டுச் சந்தையை வளப்படுத்துவதற்குப் பதில் அதன் மூலம் தேசிய சுயசார்பு பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு பதில், ஏற்றுமதியைச் சார்ந்து பொருளாதாரம் திட்டமிடப்படுகிறது.

1947 போலி சுதந்திரத்திற்குப்பின் இந்தியா பல்வேறு ஏகாதிபத்தியங்களால் மறைமுகமாக சுரண்டப்படுகின்றது; இதனால் இந்தியாவின் சொத்தும் தொடர்ந்து உறிஞ்சப்படுகின்றது. இதற்காக இந்தியாவில் சுதந்திரமான தேசியப் பொருளாதாரம் கட்டியமைக்கப்படுவது திட்டமிட்டு ஏகாதிபத்தியங்களால் ஒடுக்கப்படுகின்றது. இந்தியாவில் உள்நாட்டு சந்தை சுருக்கப்படுவதும் விவசாய உபரி பெரும் நிலப்பிரபுக்களின் சொந்த ஆடம்பர தேவைகளுக்கே பிரதானமாக பயன்படுத்தப்படுவதாலும் உள்நாட்டில் தேசிய முதலாளிகளின் வளர்ச்சி தடைபடுகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையினால் கிராமப்புறமும் தொழிற்துறையும் மேல்நிலை வல்லரசுகளால் கூடுதலாகச் சுரண்டப்படுவதால், நமது நாட்டின் சுய தேசியப் பொருளாதார வளர்ச்சி இன்னும் முடமாக்கப்பட்டுள்ளது. இதுவே தொழிற்துறை, விவசாயத்துறை நெருக்கடிகளுக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் இன்னும் பல பிரச்சினைகளுக்கும் ஊற்றுக் கண்ணாய் இருக்கின்றது.

## 16. புதிய ஜனநாயகப் புரட்சியே தீர்வு

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஊற்றுக் கண்ணான இந்த அரைக்காலனிய - அரை நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பைத் தகர்க்காமல் நமக்கு விடிவு இல்லை; ஓட்டுச் சீட்டுப் பாதையில் இது சாத்தியமில்லை; பரந்துபட்ட மக்களைத் திரட்டி ஆயுதந்தாங்கிய மக்கள் புரட்சியின் மூலமே இதைச் சாதிக்க முடியும். அதன்பின் நிறுவப்படும் புதிய ஜனநாயக சமுதாயத்தில் தான் எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படும். சமுதாயத்தின் அதிநவீன விஞ்ஞான பூர்வ உற்பத்தியில் நேரடிப் பங்காற்றும் பாட்டாளி வர்க்கமே மிகவும் முற்போக்கான வர்க்கமாக இருக்கின்றது. சமுதாயத்தை அடுத்த உயர்ந்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் வரலாற்றுப் பாத்திரம் அதற்கே உண்டு. எனவே பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் புதிய ஜனநாயக சமுதாயத்தையும், அதன் வளர்ச்சியில் சோசலிச சமுதாயத்தையும் பின்னர் சுரண்டலற்ற வர்க்கங்களற்ற பொதுவுடைமை சமுதாயத்தையும் அமைக்க வேண்டும்; மாணவர்கள் - இளைஞர்களின் பிரச்சினை உட்பட அனைத்து மக்களின் பிரச்சினைக்கும் நிரந்தர, விஞ்ஞானபூர்வ தீர்வை இவையே வழங்க முடியும்.

## 17. புரட்சிப் பாதையில் அணிதிரள்வோம்!

தேர்தல் அரசியலில் ஈடுபட்டுள்ள எல்லாக் கட்சிகளின் ஆட்சிகளிலும் மாணவர்கள் - இளைஞர்களின் பிரச்சினைகள் தீராதது மட்டுமல்ல, தீவிரமடைந்து கொண்டுதான் வருகின்றன. அதுமட்டுமல்ல, எதிர்த்துப் போராடும்

மாணவர்கள் - இளைஞர்களை ஒடுக்கியும் வருகின்றன. பல பெயர்களில் இயங்கினாலும் இக்கட்சிகள் அனைத்தும் அன்னிய வல்லரசு முதலாளிகள், உள்நாட்டு தரகு அதிகாரவர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் நலன்களுக்குப் பாடுபடுவையே. எனவே இக்கட்சிகள் எல்லா மக்களின் முன்னேற்றத்திற்கும் முட்டுக் கட்டையாக இருக்கும் இன்றைய அரைக் காலனிய - அரை நிலப்பிரபுத்துவ சமுதாயத்தை ஒழிக்கப் பாடுபட மாட்டா. இச்சமுதாயத்தை பாதுகாக்கும் இன்றுள்ள அரசியலமைப்பு, அரசியல் சட்டம் ஆகியவற்றை வைத்துக் கொண்டு எதையும் செய்ய முடியாது. தேர்தல் பாதை சமுதாய மாற்றத்துக்கு உதவாது; ஆகவே ஓர் ஆயுதந் தாங்கிய புரட்சியின் மூலமே இச்சமுதாயத்தை மாற்றியமைக்க முடியும். இதுவே உலக வரலாறு காட்டும் உண்மையாகும்.

இன்னொரு உண்மை என்னவென்றால், விடுதலைக்காகப் போராடும் விவசாயிகள் தொழிலாளர்களின் புரட்சிப் போராட்டங்களோடு மாணவர்கள் - இளைஞர்களின் போராட்டங்கள் ஒன்றிணைக்கப்பட வேண்டும். மிகவும் முன்னேறிய தத்துவமான மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையின் வழிகாட்டுதலில், தொழிலாளி வர்க்கத் தலைமையில் இப்புரட்சி நடைபெற்று ஒரு புதிய ஜனநாயக சமூகம் அமைக்கப்படும்போது எல்லோருடைய முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் வழிபிறக்கும்.

இந்திய மக்களின் ஆகப் பெரும்பான்மையினருக்கு உண்மையான ஜனநாயகத்தை வழங்குவதாகவும் விரல்விட்டு எண்ணத்தக்க எதிரிகள் மீது சர்வாதிகாரத்தை செலுத்துவதாகவும் இச்சமூகம் இருக்கும். இவ்வாறு நிறுவப்படும் சமுதாயமும் அரசும் தான் மாணவர் - இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்; கீழ்க்கண்ட திட்டங்களை அது நிறைவேற்றும்.

★ முதலாளித்துவ முறையிலான (அரைக் காலனிய - அரை நிலப்பிரபுத்துவ) அரசையும் அதன் நாடாளுமன்ற போலி ஜனநாயக ஆட்சி முறையையும் ஒழித்தல்;

★ சட்டம் இயற்றவும், சட்டங்களை அமுல்படுத்தவும் அதிகாரங்களைக் கொண்ட, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கமிட்டிகள் அனைத்து மட்டங்களிலும் நிறுவப்படும். பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவும், திருப்பியழைக்கவும் மக்களுக்கு உரிமை உண்டு; இவற்றை அடித்தளமாகக் கொண்டு அமைக்கப்படும் புதிய ஜனநாயக அரசு ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின்படி இயங்கும்.

★ கருத்து சுதந்திரம், பேச்சுரிமை, கூட்டம் நடத்த உரிமை, சங்கம் அமைக்கும் உரிமை ஆகியவற்றை மக்களுக்கு வழங்கும்.

★ அனைத்து அந்நிய நிறுவனங்கள், கம்பெனிகள், வங்கிகளின் மூலதனம் நட்டஈடு இன்றி பறிமுதல் செய்யப்படும்.

★ நிலப்பிரபுக்கள், தரகு அதிகார வர்க்க முதலாளிகள், மதநிறுவனங்கள் கோவில்கள், அறக் கட்டளைகளுக்கு சொந்தமான நிலம் மற்றும் அனைத்து உடமைகளும் நட்ட ஈடின்றி பறிமுதல் செய்யப்படும்;

'உழுபவருக்கு நிலம் சொந்தம்' என்கின்ற அடிப்படையில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலப்பங்கீடு செய்யும். பாசன வசதி, புதிய புதிய நிலங்களை விவசாய உற்பத்திக்குக் கொண்டு வருவது, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஆகியவற்றிற்கு முன்னுரிமை தரும்.

★ நாட்டின் உற்பத்தி, மக்களின் தேவை அடிப்படையிலானதாக இருக்கும்; இலாப நோக்கமின்றி உழைப்பும், உற்பத்தியும் மக்களுடையத் தேவைக ளுக்காகப் பயன்படுத்தப்படும்.

★ தற்போதையக் கல்விமுறையும், நிறுவனங்களும் ஒழிக்கப்படும். விதிவிலக் கின்றி தனியார், மத நிறுவனங்களிடமிருந்து கல்வி நிறுவனங்கள் மீட்டெடுக்கப்பட்டு மக்களின் உடமையாக்கப்படும். அறிவியல் பூர்வமான ஒரு புதிய ஜனநாயகக் கல்வி முறையும், நிறுவனமும் ஏற்படுத்தப்படும். தொடக்கக் கல்வி முதல் உயர்கல்வி வரை அனைத்து நிலைகளிலும் தாய்மொழியே பயிற்று மொழியாகப் பயன்படுத்தப்படும். அனைவருக்கும் இலவசக் கல்வி கட்டாயமாக உத்திரவாதத்துடன் அளிக்கப்படும்.

★ கல்வி நிர்வாகத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், உழைக் கும் மக்களின் பிரதிநிதிகளுக்கு பங்கு அளிக்கப்படும். இவர்களும் ஆசிரியர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். விரும்பத்தகாத ஆசிரி யர்களை நீக்கும் உரிமை மக்களுக்கு உண்டு.

★ அந்நிய ஏகாதிபத்திய சீரழிவு கலாச்சாரத்தையும், நிலப்பிரபுத்துவ பழமைப் பிற்போக்குக் கலாச்சாரத்தையும், குறிப்பாகப் பார்ப்பன மதக் கலாச்சாரத்தையும் ஒழித்து மக்கள் ஜனநாயகக் கலாச்சாரம் வளர்க்கப்படும்.

★ அனைத்துத் தேசிய இன மொழிகளும் ஆட்சி மொழியாக்கப்படும்; சம அந்தஸ்து வழங்கப்படும்; அந்தந்த தேசிய இனப் பகுதிகளில் அந்தந்த தேசிய இன மொழிகளே நிர்வாக, பயிற்று மொழியாக்கப்படும்.

★ அனைத்துத் தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகக்கூடிய உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படும். சுயமான வளர்ச்சிக்கு உத்திரவாதம் வழங்கப்படும். விருப்ப பூர்வமான, சம அந்தஸ்து அடிப்படையில் இந்தியாவை ஐக்கியப்படுத்தும். தேசிய இன, மத சிறுபான்மையினருடைய உரிமைகள் பாதுகாக்கப்படும். அனைத்து மக்க ளுக்கும் நல்லதொரு தரமான வாழ்க்கைத் தரத்திற்கு உத்திரவாதம் தரப்படும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்படும். இந்த நோக்கங் களை நிறைவேற்றும் வகையில் நாடு தொழில்மயமாக்கப்படும்.

★ மதவாதம், சாதி பாகுபாடு, பெண்ணடிமைத்தனம், இன்னும் பழைய சமுதாய ஒடுக்குமுறை வழக்கங்கள் அனைத்தும் அவற்றை நியாயப்படுத் தும் பார்ப்பனியமும் ஒழிக்கப்படும். மதவெறி, சாதிவெறி, இனவெறி அமைப்புகள் தடை செய்யப்படும்.

★ தேசிய முதலாளிகளின் தொழில்களும், வர்த்தகமும் பாதுகாக்கப்படும்.

★ ஊதியம் பெறும் எல்லாத் தொழிலாளர்களுக்கும், தொடர்ந்து வேலை செய்யும் இடங்களில் உணவிற்காகக் கொடுக்கப்படும் ஒரு மணி நேரத்தையும் சேர்த்து வேலை நேரம் எட்டுமணி நேரமாக்கப்படும். மிகைநேர வேலைக்கு (ஓவர் டைம்) முழுத் தடை விதிக்கப்படும்.

★ பள்ளி வயது குழந்தைகளை (16 வயதுக்கு கீழ்) வேலைக்கு அமர்த்தத் தடை விதிக்கப்படும். 16 வயதிலிருந்து 20 வயது வரையிலான உழைப்பாளர்களுக்கு வேலை நேரம் 4 மணி நேரமாக்கப்படும். இவர்களை இரவு வேலைக்கோ, சுகாதாரமற்ற வேலைகளிலோ, சுரங்கங்க ளிலோ வேலைக்கு அமர்த்தத் தடை விதிக்கப்படும்.

★ பெண்களின் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் வேலைகளில் பெண்களை ஈடுபடுத்தத் தடை விதிக்கப்படும். இரவு வேலைகளில் பெண்களை ஈடுபடுத்தத் தடை விதிக்கப்படும். குழந்தை பெறுவதற்கு எட்டு வாரங்களுக்கு முன்பும், எட்டு வாரங்கள் பின்பும் சம்பள நட்டமில்லாமல் இலவச மருத்துவ உதவியுடன் வேலையிலிருந்து விடுமுறை அளிக்கப்படும்.

★ ஏகாதிபத்திய அரசுகளுடனும், ஐ.எம்.எஃப்., உலகவங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களுடனும் இந்தியப் பிற்போக்கு அரசு செய்து கொண்டுள்ள அனைத்து மக்கள் விரோத, தேச விரோத, சமனற்ற ஒப்பந்தங்கள் அனைத்தும் ரத்து செய்யப்படும். அனைத்து அந்நிய கடன்களையும் ரத்து செய்யப் போராடும். இந்தியாவில் உள்ள அனைத்து ஏகாதிபத்திய நிறுவனங்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு நாட்டுடமையாக்கப்படும்!

இக்கடமைகளை நிறைவேற்றுவதன் மூலமே நாட்டின் முதுகெலும்பாகிய மக்கள் தொகையின் முக்கால்வாசி பேரான விவசாயிகளின் வாழ்க்கையை முன்னேறச் செய்ய முடியும்; தொழிலாளர்கள் வாழ்வு வளம்பெறும்; சிறு வியாபாரிகள், கடைக்காரர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், சிறு தொழில் செய்பவர்கள் ஆகியோர் நிம்மதியாக வாழ முடியும்; தேசிய முதலாளிகள், பணக்கார விவசாயிகள் என்ற பிரிவினரின் சுயமான வளர்ச்சிக்கு ஊக்கத்தைக் கொடுத்து நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் பாதையமைத்துக் கொடுக்க முடியும். இந்த மாற்றத்தில்தான் மாணவர்களும், இளைஞர்களும், அவர்களின் கடந்த கால இன்னல்களிலிருந்தும் விடுபட்டு புதிய மனிதர்களாக அவர்களைப் புனரமைத்துக் கொள்ள முடியும். இந்த மாற்றங்கள் அனைத்திலும் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் தொழிலாளர் - உழவர் நேச அணியை அச்சாணியாகக் கொண்டு மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பிற குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் உதவியோடும் ஆயுதத்தாங்கிய போராட்டத்தின் மூலமே இக்கடமைகளை நிறைவேற்ற முடியும். இவ்வாறு ஒட்டு மொத்த மாற்றத்திற்காக தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் அதே வேளையில் மாணவர்கள், இளைஞர்களின் குறிப்பான கடமைகளையும் ஒருங்கமைத்துக் கொண்டு போராட வேண்டும்.

# புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணியின் நோக்கங்கள்

★ அனைவருக்கும் தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை ஜனநாயக பூர்வமான, விஞ்ஞான பூர்வமான கல்வி இலவசமாக கிடைக்கப் போராடுவோம்!

★ தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை தாய்மொழியை பயிற்று மொழியாக்கப் போராடுவோம்! இந்தி மற்றும் ஆங்கில மொழியின் அடாவடித்தனமான பயிற்று முறையை முறியடிப்போம்!

★ ஆங்கில மோகம், இந்தி திணிப்பு ஆகியவற்றை எதிர்த்துப் போராடு வோம்! தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கப் போராடுவோம்! தமிழ் வழி படித்தவர்களுக்கே தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்பதற்குப் போராடுவோம்!

★ சிறுபான்மையோர் சலுகை என்ற பெயரிலும், பிற வகையிலும் கொள்ளை அடிக்கும் அனைத்து மத நிறுவனங்களின் பிடியிலிருந்து கல்வி நிறுவனங் களைப் பறித்தெடுப்போம்!

★ அனைத்து தனியார் மற்றும் சுயநிதி கல்வி வியாபாரிகளின் பிடியிலிருந்து கல்வி நிறுவனங்களை பறித்தெடுப்போம்! மக்களின் உடமையாக்குவோம்!

★ கல்வி முறை மற்றும் கல்வி நிர்வாகச் சீர்கேடுகளை எதிர்த்துப் போராட மாணவர்கள் - பெற்றோர்கள் - ஆசிரியர்கள் ஒற்றுமையைக் கட்டியமைப் போம்!

★ பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக நிர்வாக உறுப்புகளில் மாணவர்களின் பிரதிநிதித்துவம் பெறப் போராடுவோம்!

★ அனைவருக்கும் கல்வி! அனைவருக்கும் வேலை! என்பதை அடிப்படை உரிமையாக்குவோம்! வேலையில்லாத் திண்டாட்டத்தை வேரோடு ஒழிக் கப் போராடுவோம்!

★ வேலையற்றக் காலங்களில் மாணவர்கள் - இளைஞர்களின் அடிப்படைத் தேவைக்கு ஈடான, அரசின் நிவாரணத் தொகை உதவிக்குப் போராடு வோம்!

★ தாழ்த்தப்பட்ட, மலைவாழ் பழங்குடி மக்களின் மீதான அடக்குமுறைக ளுக்கு எதிராகப் போராடுவோம்!

★ பெண்ணடிமைத்தனத்தை ஒழிப்போம்; பெண்களின் சம உரிமைக்காகப் போராடுவோம்!

★ மாணவர்கள் - இளைஞர்களை பிளவுப்படுத்தும் சாதி, மதவெறிக்குப் பலியாக மாட்டோம்!

★ சாதி ஒடுக்குமுறையை நியாயப்படுத்தும் பார்ப்பனியத்தை தூக்கியெறி வோம்! சாதி, மத நிறுவனங்களை ஒழித்துக் கட்டுவோம்! பி.ஜே.பி.,

ஆர்.எஸ்.எஸ்., ஏ.பி.வி.பி. இந்து முன்னணி, பஜ்ரங்தள், விஷ்வஹிந்து பரிஷத், அல் உம்மா, ஜமாத்-இ-இஸ்லாமி போன்ற மதவெறி அமைப்புகளை ஒழித்துக் கட்டுவோம்!

★ உழைக்கும் மக்களின் அடிப்படைச் சுகாதார வசதி, கழிப்பிட வசதி, குடிநீர் வசதி மற்றும் பிற உரிமைகளுக்காகப் போராடுவோம்!

★ காவிரி நீரில் தமிழர்கள் உரிமையை நிலைநாட்டப் போராடுவோம்!

★ இந்து - இந்தி - இந்தியா, போலி தேசியத்தை நிராகரிப்போம்! தேசிய இன ஒடுக்குமுறையை ஒழித்துக் கட்டுவோம்! பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவோம்! விருப்பப் பூர்வமான, சம அந்தஸ்துடன் கூடிய தேசிய இனங்களின் ஒன்றியத்தைக் கட்டியமைப்போம்!

★ இலஞ்ச, ஊழல் முறைகேடுகளை முறியடிப்போம்! ஆட்சியாளர்களின் ஊதாரி, உல்லாச, வக்கிர வாழ்க்கையை எதிர்த்துப் போராடுவோம்!

★ போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணி திரள்வோம்!

★ நாட்டைச் சூறையாடும் அந்நிய ஏகாதிபத்தியங்களையும், தேசத் துரோக ஆளும் கும்பலான தரகு - அதிகார வர்க்க முதலாளித்துவத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் ஒழித்துக் கட்டுவோம்!

★ நாட்டை மறு காலனியாக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையையும், காட் ஒப்பந்தத்தையும் தூக்கியெறிவோம்!

★ காங்கிரசு கொண்டுவரத் துடிக்கும் பாசிச அபாயத்தையும், இந்து மதவெறிப் பாசிசத்தையும் எதிர்த்துப் போராடுவோம்!

**நாட்டுப்பற்றும் ஜனநாயக உணர்வும் கொண்ட மாணவர்களே! இளைஞர்களே! பு.மா.இ.மு.வில் இன்றே இணையுங்கள்!**

★ ☆ ★

# அமைப்பு விதிகள்

**அமைப்பின் பெயர்:-**

**புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, தமிழ்நாடு**

**அமைப்பின் கொடி:-** செங்கொடியின் மத்தியில் வெண்ணிறத்தில் சூரியன்.

**கொடியின் அளவு:- நீளம்: அகலம் 3:2**

**அமைப்பின் மைய முழக்கங்கள்:-**

★ அனைவருக்கும் கல்வி; அனைவருக்கும் வேலை !
★ புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுப்போம் !

**நோக்கங்கள்:-**

1. மாணவர்கள் - இளைஞர்கள் மீதான அனைத்து வகை சமூக, பொருளாதார அரசியல் ஒடுக்குமுறைகளையும் ஒழித்துக்கட்டி, அவர்களின் அறிவுத் திறமையின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள விலங்குகளை உடைத்து ஒவ்வொரு மாணவன், இளைஞனிடமும் பொதிந்துள்ள உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணர்வது.
2. விஞ்ஞான விரோத, ஜனநாயக விரோத, மக்கள் விரோத, கல்வி முறையை ஒழித்துகட்டுவது; புதிய ஜனநாயகக் கல்வி முறையையும், நிறுவனத்தையும் ஏற்படுத்துவது; அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வியளிப்பது; தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை அனைத்து நிலைகளிலும் தாய்மொழியையே பயிற்று மொழியாகப் பயன்படுத்துவது.
3. இந்திய நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள மேலாதிக்க வல்லரசுகள் மற்றும் பிற ஏகாதிபத்தியங்கள், தரகு அதிகார வர்க்க முதலாளித்துவம், நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றை அடித்து நொறுக்கும் புதிய ஜனநாயகப் புரட்சியின் படைவரிசையில் அணிவகுத்து, வெற்றிக்காக உறுதியுடன் போராடுவது.
4. தேர்ந்தெடுக்கப்பட்ட உழைக்கும் மக்கள் கமிட்டிகளுக்கே அதிகாரம் என்ற அடைப்படையிலான புதிய ஜனநாயக அதிகார அமைப்பை நிறுவப் பாடுபடுவது; அனைத்து தனியார், மதவாதிகளிடமிருந்து கல்வி நிறுவனங்களைப் பறித்து மக்கள் உடமையாக்குவது.
5. உற்பத்தி சக்திகளின் மீதான அரைநிலப்பிரபுத்துவ விலங்குகளையும் அந்நிய ஏகாதிபத்திய பிடிப்புகளையும் உடைத்தெறிந்து உற்பத்தி சக்திகளின் தங்குதடையற்ற வளர்ச்சிக்கு வழிவகுப்பது; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பூண்டோடு ஒழிப்பது; அனைத்து மக்களுக்கும் நல்லதொரு வாழ்க்கைத் தரத்திற்கான உத்திரவாதத்திற்குப் பாடுபடுவது.

பணிகள்:-

1. மக்களைப் பிளவுபடுத்தி காலங்காலமாய்த் தீராத நோயாகப் பீடித்துள்ள கொடிய சாதி, மதப் பாகுப்பாடுகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும், தீண்டாமை, பெண்ணடிமை, சாதிய கட்டுபாடுகள் போன்றவைகளையும் முறியடிக்க உறுதியுடன் போராடுவது; சீர்திருத்த மற்றும் புரட்சிகர திருமண முறைகளின் மூலமும், சாதி, மத வித்தியாசமின்றி மக்களிடையே சகோதரத்துவ உறவை வளர்க்கப் பாடுபடும்; ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி, பஜ்ரங்தள், இந்து முன்னணி, ஏ.பி.வி.பி, ஜமாத் - இ - இஸ்லாமி, அல் உம்மா போன்ற மதவெறி அமைப்புகளை முறியடிக்கப்பாடுபடுவது.
2. அனைத்து தேசிய இனங்களின் மீதான ஒடுக்குமுறையை எதிர்ப்பது; தேசிய இனங்களின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமைக்காகவும், விருப்பப் பூர்வ அடிப்படையில் தேசிய இனங்களின் ஒன்றியத்தை அமைக்கவும் பாடுபடும்.
3. தமிழ் தேசிய இனத்தின் மீதான இந்தித் திணிப்பு, ஆங்கில மோகத்தைத் தூண்டுதல், பார்ப்பன கலாச்சார ஆதிக்கம் போன்றவைகளை முறியடிக்கப் பாடுபடும். வேதாகமக் கல்லூரிகளை இழுத்து மூடவும் பாடுபடும். தமிழ் தேசிய இனத்தின் மொழி, பண்பாட்டை வளர்க்கும். தொழில் மற்றும் பிற வளர்ச்சிப் பணிகளைப் புறக்கணித்து வரும் மைய அரசை எதிர்த்து மாநில உரிமைகளுக்காக போராடும். காவிரி நீரில் தமிழக உரிமையை நிலைநாட்டப் பாடுபடும்.
4. அனைத்து தனியார் சுயநிதி கல்வி நிலையங்களையும், பாதிரி, பண்டாரங் கள், முல்லாக்கள் போன்ற மதவாதிகளின் பிடியிலிருந்தும் சாதிய டிரஸ்டுகள், குழுமங்களின் பிடிகளிலிருந்து கல்வி நிலையங்கள் பறிக்கப் பாடுபடும். மக்கள் உடமையாக்கப் பாடுபடும்.
5. பெருகிவரும் பன்னாட்டு தொழிற்கழகங்கள், ஐ.எம்.எஃப், உலக வங்கி போன்றவைகளின் ஆதிக்கத்தை முறியடிக்கும். நாட்டின் அரைகுறை இறையாண்மையையும் மேலாதிக்க வல்லரசுகளின் காலடியில் ஒப்படைக் கும், நாட்டை மறு காலனியாக்கும் கொள்கையையும், தேச விரோத, மக்கள் விரோத, சமனற்ற ஒப்பந்தங்களையும், உடன்பாடுகளையும் இரத்து செய்யப் போராடும்.
6. ஏகாதிபத்தியங்களால் திணிக்கப்படும் சுற்றுச் சூழலுக்குக் கேடு செய்யும், மக்கள் உயிருக்கு உலைவைக்கும் ஆலைகள், தொழிற்சாலைகள், அணைக் கட்டுகள் போன்றவைகளை எதிர்த்துப் போராடும். இதுவரை இந்திய மக்களின் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் நடத்தியுள்ள மோசடிகளுக்கு மக்கள் மன்றத்தில் இவைகள் தண்டிக்கப்படுவதற்குப் போராடும்.
7. அந்நிய ஏகாதிபத்திய அடிமைச் சீரழிவுக் கலாச்சாரத்தையும், நிலப்பிரபுத்து வப் பழமை பிற்போக்குக் கலாச்சாரத்தையும் குறிப்பாகப் பார்ப்பனிய கலாச்சாரத்தையும் ஒழித்து மக்கள் ஜனநாயகக் கலாச்சாரம் வளரப் பாடுபடும்.

8. கல்வியை வியாபாரமாக்கும் புதிய கல்விக் கொள்கைக்கு எதிராகவும், விஞ்ஞான விரோத, ஜனநாயக விரோத கல்வி முறையை ஒழித்துக் கட்டவும் பாடுபடும். படைப்புத் திறனை ஊக்குவிக்கும் - வளப்படுத்தும் பயிற்றுமுறை, தேர்வு முறையை கொண்டுவர பாடுபடும். அனைவருக்கும் அனைத்து கல்வி நிலைகளிலும் இலவசக் கட்டாயக் கல்வி தரப்படவும், தாய்மொழியில் பயிற்றுவிக்கப்படவும் பாடுபடும்.

9. அனைத்து கல்வி நிலையங்களிலும் நூலக, விளையாட்டுத் திடல், ஆய்வுக்கூடங்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கும், பொது நூலகங்க ளில் விஞ்ஞான பூர்வமான, புரட்சிகரமான நூல்களுக்கு விதிக்கப்பட்டு வரும் தடைகளை நீக்குவதற்கும், பிற்போக்கு மற்றும் சீரழிவு ஏடுகள், புத்தகங்களைத் தடை செய்யவும் போராடும்; நூலக இயக்கத்தில் திரளான மக்களை ஈடுபடுத்துவதற்குப் பாடுபடும்.

10. இளைஞர்களின் - மாணவர்களின் போர்க்குணத்தை மழுங்கடிக்கும் ஆபாச திரைப்படங்கள் பத்திரிகைகள், லாட்டரி, சூதாட்டம், போதை மருந்து, சாராயம் போன்றவைகளை எதிர்த்துப் போராடும்.

11. இளைஞர்களின் உடல்திறனை வளர்க்க உடற்பயிற்சி நிலையங்கள், விளையாட்டுத் திடல் போன்றவற்றை அரசு செலவில் அமைக்கவும், வேலையில்லா இளைஞர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கவும் பாடுப டும்.

12. மாணவர்கள், இளைஞர்கள் மீதும் போராடும் மக்கள் மீதும் ஜனநாயக சக்திகள் மீதும், அப்பாவிகள் மீதும் போலீசு, ராணுவம் போன்றவை நடத்திவரும் அத்துமீறல்களுக்கெதிராக மாணவர்கள், இளைஞர்களை அணிதிரட்டிப் போராடும்.

13. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியுடன் உடன்படும் பிற தோழமை அமைப்புகளுடன் இணைந்து போராடும். மாணவர் - இளைஞர்களின் புரட்சிகர, ஜனநாயக உணர்வுகளை சீர்குலைக்கும் நோக்கத்துடன் செயல்படும் தன்னார்வக் குழுக்களின் எத்தணிப்புகளை முறியடிக்கும். பிற சமரச அமைப்புகளை அம்பலப்படுத்தி தனிமைப்படுத் தும்.

14. உலக மேலாதிக்கத்தை நிறுவுவதற்காக அமெரிக்கா மற்றும் பிற மேலாதிக்க வல்லரசுகளின் அனைத்து மேலாதிக்க எத்தணிப்புகளுக்கு எதிராகப் போராடும். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஒடுக்கப்பட்ட நாடுகள், மக்க ளின் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்துப் போராடும்.

15. மேலாதிக்கவாதிகளுக்கு உறுதுணையாக பிராந்திய அளவில் துணைவல்லர சுக் கொள்கையைப் பின்பற்றும் இந்தியப் பிற்போக்கு ஆளும் கும்பலை தூக்கி யெறியவும், அண்டை நாடுகளுடன் நட்புறவைக் கட்டி வளர்க்கவும் பாடுபடும். தேசிய வெறி, மதவெறி ஆயுதங்களுடன் மக்கள் மீது பாசிசத்தைத் திணிக்க முயற்சிக்கும் ஆளும் வர்க்க சதிகளை தவிடுபொடி யாக்க மக்களைத் திரட்டிப் போராடும்.

16. ஓட்டுக் கட்சிகள் மற்றும் அவைகளின் துணை நிறுவனங்கள், அரசு எந்திரம் மற்றும் அதிகார வர்க்கத்தால் அன்றாடம் கையாளப்பட்டும், நியாயப்படுத் தப்பட்டும் மக்களிடையே பரப்பப்பட்டும் வருகின்ற லஞ்ச ஊழல், பொது வாழ்வில் அனைத்து ஒழுக்கக் கேடுகளையும் கையாளுதல், ஓட்டுப் பொறுக்கும் மோசடி நடவடிக்கைகள் போன்ற கலாச்சார சீரழிவுகளையும் எதிர்த்து வன்மையாகப் போராடும். மாணவர் - இளைஞர்களை இழிவுபடுத்தும் எந்த ஓட்டுக் கட்சியாக இருந்தாலும், அரசாக இருந்தாலும் எதிர்த்துப் போராடும். மக்கள் மத்தியில் அம்பலப்படுத்துவதற்காக தேர்தல் புறக்கணிப்பு இயக்கங்களை மேற்கொள்ளும். ஓட்டுக்கட்சிகளின் தில்லுமுல் லுகளுக்கு அடிப்படையான நாடாளுமன்ற அரசாட்சியை தூக்கியெறியப் பாடுபடும்.
17. தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறையை எதிர்க்கும். கல்வி, வேலை வாய்ப்புகளில் இவர்களுக்கு முன்னுரிமை கோரி போராடும். அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கு உரிய பங்களிப்புக் கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரப் போராடும். தன்னம்பிக்கையையும் துணிவையும் பெண்களிடம் வளர்க்கப் பாடுபடும்.
18. கல்விமுறை பற்றித் திட்டமிடும் நிர்வாக உறுப்புகளிலும், பல்கலைக் கழக செனட் குழுவிலும் மாணவர்களுக்குரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படப் போராடும்.
19. மனப்பாடம் செய்து வாந்தியெடுக்கும் தேர்வு முறைக்குப் பதிலாக மாணவர்களின் சிந்தனை ஆற்றலையும், விஞ்ஞான கண்ணோட்டங்களை யும் வளர்க்கும் நோக்கில் தேர்வு முறை மாற்றம் செய்யப்படவும், புத்தகங்களைப் பார்த்துப் பரிசீலனையுடன் தேர்வு எழுதும் முறையைக் கொண்டு வரவும் பாடுபடும்.

## அமைப்பு வடிவம்

1. மாநில மாநாடு, மாநிலப் பொதுக்குழு, மாநிலச் செயற்குழு,
2. மாவட்ட மாநாடு, மாவட்டப் பொதுக்குழு, மாவட்டச் செயற்குழு.
3. கிளைகள்.

## 1. மாநில மாநாடுகள்

1. மாநில மாநாடுகளே உச்ச அமைப்பாகும்.
2. இரண்டாண்டுக்கு ஒருமுறை மாநில மாநாடு நடக்கும்.
3. கிளைகள் விகித அடிப்படையில் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப் பும். இந்த எண்ணிக்கையை மாநிலப் பொதுக்குழு தீர்மானிக்கும்.
4. இரண்டு மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கொண்ட வேலை கள், பெற்ற அனுபவங்களைப் பரிசீலித்து முடிவெடுக்கும். இது விமர்சன - சுயவிமர்சன அடிப்படையில் அமைந்திருக்கும். அடுத்த மாநாடு வரையிலான வேலைத் திட்டத்தையும் தயாரிக்கும்.
5. இரு ஆண்டுகளின் வேலை அறிக்கைகளும், வரவு செலவுக் கணக்குகளும் மாநிலச் செயற்குழுவால் மாநிலப் பொதுக்குழுவின் அங்கீகாரத்துடன் முன்வைக்கப்படும்.

6. மாநில பொதுக்குழுவையும், மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்கள் மத்தியில் இருந்து மாநிலச் செயற்குழுவையும் மாநாடு தேர்ந்தெடுக்கும். இரண்டு குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் மாநாடு முடிவு செய்யும்.
7. மாநிலச் செயற்குழு உறுப்பினர்களிலிருந்து பொதுச் செயலாளரை மாநாடு தேர்ந்தெடுக்கும்.
8. தேர்தல் இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடைபெறும்.

## 2. மாநிலப் பொதுக்குழு

1. இரு மாநில மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மாநிலப் பொதுக்குழுவே உச்சமட்ட அமைப்பாக இருக்கும்.
2. மாநிலப் பொதுக்குழுவிலிருந்து பொதுச்செயலாளர், இணைச்செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
3. மாநில மாநாட்டின் முடிவுகளைப் பருண்மையாக வகுத்தளிப்பதுடன், மாநிலச் செயற்குழு மூலம் நடைமுறைப்படுத்துவதும் சோதித்தறிவதும் இதன் பணியாகும்.
4. மாநிலப் பொதுக்குழு, மாநிலச் செயற்குழுவால் ஆறு மாதத்திற்கொரு முறை கூட்டப்படும். அதற்கான சுற்றிக்கை 15 நாட்களுக்கு முன் அனுப்படும். மாநிலச் செயற்குழு உறுப்பினரில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் கோரும் பட்சத்தில் கூட்டம் கூட்டப்படலாம். மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் கூடியிருக்கும் மாநிலப் பொக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் எல்லா முடிவுகளும் செல்லுபடியாகும். அவசரத் தேவைகள் கருதி மாநிலப் பொதுக்குழு கூட்டப்படலாம்.
5. பொதுக்குழுவில் மூன்றில் இரண்டு பங்கு கோரும் பட்சத்தில் மாநிலப் பொதுக்குழு கூட்டப்பட வேண்டும்.
6. அமைப்புக்கு விரோதமான அல்லது அமைப்பு விதிகளுக்கு முரணான நடவடிக்கை காரணமாக, எந்த ஒரு மாநிலச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினரை நீக்குவதற்கும், எந்த ஒரு கிளையையும் கலைக்கவும் மாநிலப் பொதுக்குழுவுக்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளை அடுத்த மாநாட்டின் முன் வைத்து அங்கீகாரம் பெறவேண்டும்.

## 3. மாநிலச் செயற்குழு

1. மாநில மாநாட்டின் முடிவுகளை மாநிலப் பொதுக்குழு பருண்மையாக வகுத்தளித்தவாறு செயல் அரங்குகளில் நடைமுறைப்படுத்தும்.
2. அமைப்பின் மைய வெளியீடுகள், பிரசுரங்களைப் பொறுப்பேற்று நடத்தும். அமைப்பின் இதழைப் பொறுப்பேற்று நடத்தும். அதற்கான ஆசிரியர் குழுவை நியமிக்கும்.
3. மாநிலச் செயற்குழு மூன்றுமாத காலத்திற்கொருமுறை கூடும். அதற்கான சுற்றிக்கை 10 நாட்களுக்கு முன் அனுப்பப்படும். மாநிலச் செயற்குழு உறுப்பினரில் 3 -ல் ஒரு பங்கு கோரும் பட்சத்தில் செயற்குழு

கூட்டப்படும். மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் கூடியிருக்கும் மாநிலச் செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்படும் எல்லா முடிவுகளும் செல்லுபடியாகும். அவசரத் தேவையைக் கருதியும் மாநிலச் செயற்குழு கூட்டப்படலாம்.

4. மாநிலப் பொதுக்குழுவை மாநிலச் செயற்குழு ஆறு மாதத்திற்கொருமுறை கூட்டும். வேலை அறிக்கை உட்பட தன் நடவடிக்கைகளுக்கு அங்கீகாரம் பெறும். அடுத்த வேலைத் திட்டங்களை முன்மொழியும்.
5. மாநிலச் செயற்குழுவில் இடம் ஏதேனும் காலியாக நேரிடுமானால் மாநிலப் பொதுக்குழுவிலிருந்து நியமிக்கும்படி முன்மொழியும்.
6. மாநிலப் பொதுக்குழுவின் அங்கீகாரத்துடன் மாநில மாநாட்டைக் கூட்டும்.
7. அடுத்த மாநாட்டின் விவாதப் பொருள் மற்றும் வழிமுறை குறித்து முடிவெடுக்கும்; நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான மாநாட்டுக் குழுவை நியமிக்கும் பொறுப்பை ஏற்கும்.
8. மாநில முழுவதும் உள்ள எந்த மட்ட அமைப்பையும், உறுப்பினர்களையும் சென்று சந்திக்க, சோதித்தறிய உரிமையுண்டு.
9. அமைப்பிற்கு விரோதமான அல்லது அமைப்பு விதிகளுக்கு முரணான நடவடிக்கை காரணமாக எந்த ஒரு உறுப்பினரை விலக்கவும் எந்த ஒரு கிளையை கலைக்கவும் மாநிலச் செயற்குழுவுக்கு உரிமையுண்டு. இவ்வாறு எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கையை மாநில பொதுக்குழுவின் முன் வைத்து அங்கீகாரம் பெற வேண்டும்.

## 4. பொதுச் செயலாளர் கடமைகள், உரிமைகள்:-

1. பொதுச் செயலாளர் மாநில மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்படுவார்.
2. மாநில செயற்குழுவின் முடிவின் அடிப்படையில் தானாகவே ஊக்கத்துடன் செயல் திட்டத்துடன் இயங்குவார். புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் மாநில ரீதியான அன்றாட வேலைகளில் பருண்மையான செயல் அரங்குகளில் திட்டமிட்டு நடைமுறை ரீதியாக செயல்படுத்த பொறுப்பேற்பார்.
3. மாவட்ட, கிளை மற்றும் உறுப்பினர் மட்டம் வரை நடைமுறை வேலைகளின் போதும், எல்லா நேரங்களிலும் தொடர்பு கொள்ளவும் அமைப்பின் நலன் கருதி சோதித்தறியவும் பொதுச் செயலருக்கு உரிமையுண்டு.
4. மாநிலச் செயற்குழுவில் வேலையறிக்கையை சமர்ப்பிக்கவும் அதன் அங்கீகாரம் பெறவும் வேண்டும்.
5. பொதுச் செயலரின் நடவடிக்கை மாநிலச் செயற்குழுவின் பெரும்பான்மைக்கு கட்டுபட்டவை.

## 5. இணைச் செயலாளர் கடமைகள், உரிமைகள்:-

1. பொதுச் செயலாளரின் வேலைகளில் அவருடன் துணையாகயிருந்து செயல்படுவார். செயற்குழுவின் வேலைப் பிரிவினையின் அடிப்படையில் பொறுப்பேற்றுச் செயல்படுவார்.

2. பொதுச் செயலாளர் இல்லாத நேரங்களில் செயற்குழுவின் அன்றாட வேலைகளைப் பொறுப்பேற்று வழி நடத்திச் செல்வார்.

## 6. பொருளாளரின் கடமைகள், உரிமைகள்:-

1. அமைப்பின் ஒட்டு மொத்த வரவு - செலவுக் கணக்கு விவரங்களை முறைப்படுத்தி இயக்கி வருவார். ஆறு மாதத்துக்கொருமுறை வரவு - செலவு அறிக்கையைப் பொதுக் குழுவின் முன் சமர்பிப்பார்.
2. நிதி நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தேவையானால் மேலும் நிதி திரட்டுவதற்கான வாய்ப்புக்களைப் பரிசீலித்து, அதற்கான திட்டங்களைச் செயற்குழுவிற்கு முன்மொழிவார்.
3. நிதி நிலைமைகள் மற்றும் தேவைகள் பற்றிய அவசரச் சுற்றறிக்கைகளைப் பொதுச்செயலாளரின் அனுமதியோடு அமைப்பில் சுற்றுக்கு அனுப்புவார்.

## 7. மாவட்ட, கிளை அமைப்புகள்:-

மாவட்டக் கிளைகள் மற்றும் அவற்றின் பொறுப்பாளர்கள், மாநில மாநாடு, மாநிலப் பொதுக்குழு, மாநில செயற்குழுவைப் போன்ற கட்டுமானங்கள், கடமைகள், உரிமைகளைக் கொண்டு அந்தந்த வரம்புக்குட்பட்ட பகுதிகளில் இயங்குவர்.

கிளை அமைப்பில் உள்ள உறுப்பினரின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கிளைப்பகுதிக்கு உரிமை உண்டு. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும் தோழர் மேல் மட்டக்குழுவுக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அதனையும் கிளை அமைப்பு மூலமாகவே செய்ய வேண்டும்.

## 8. உறுப்பினர் கடமைகள், உரிமைகள்:-

1. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் இலட்சியம், கொள்கை ஆகியவற்றை உறுதியாக பற்றி நின்று செயல்படுவராகவும், பிரச்சாரம் செய்பவராகவும் இருக்க வேண்டும்.
2. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் வெளியீடுகளையும், பத்திரிக்கையையும் பரப்புபவராகவும் அமைப்பு வேலைகளை நிறைவேற்றுபவராகவும், அமைப்பு முடிவுகளுக்கு கட்டுபட்டு கண்ணும் கருத்துமாக செயல்படுவராகவும் அமைப்பை வலுப்படுத்துபவராகவும் இருக்க வேண்டும்.
3. 14 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள், இளைஞர்கள் உறுப்பினர் ஆகலாம்.
4. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியில் உறுப்பினராக விரும்புவர்கள் சூதாடுபவராகவோ, ஆண்/பெண் பித்தராகவோ, குடிகாரராகவோ, சாராயம் காய்ச்சுதல், திருட்டு, கடத்தல் செய்பவராகவோ இருக்கக்கூடாது.

5. எந்தஒரு அரசியல் கட்சியின் சார்பாளராக இருப்பினும் மாணவர் - இளைஞரின் பிரச்சினைக்காகப் போராட முன்வரும்போது புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் கொள்கை, நிலைபாடுகளை ஒட்டி இயங்க வேண்டும்.

6. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் கடமைகளை நிறைவேற்றும் பொழுது, உறுப்பினர்கள் தமது செயல்திறனை வளர்த்து கொள்ளும் பொருட்டும் தம்மிடம் எழுகின்ற தவறான போக்குகளைக் களைந்து கொள்ளும் பொருட்டும் விமர்சன - சுயவிமர்சன முறையை தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

7. மாணவர் - இளைஞர் மீதான அனைத்து சமூக, பொருளாதார அரசியல் அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடுபவராக இருக்க வேண்டும். அடக்குமுறைக்கெதிராக போராடும் பிற பிரிவு மக்களை ஆதரிப்பவராக இருக்க வேண்டும்.

8. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி உறுப்பினர்கள் நேர்மையாகத் திறந்த மனதுடன் இருக்க வேண்டும். ஜனநாயக மத்தியத்துவத்தை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் அமைப்பின் ஐக்கியத்தைக் கட்டிக் காப்பவராக இருக்க வேண்டும். பிளவுவாதிகள், சீர்குலைவு வாதிகள், துரோகிகள் ஆகியவர்களுக்கெதிராக எச்சரிக்கையுடன் எந்நேரமும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

9. சாதிய முறை, பெண்ணடிமைத்தனம், தீண்டாமை போன்ற நிலப்பிரபுத்துவ சமூக பண்பாட்டுப் போக்குகளையும் ஏகாதிபத்திய அன்னிய அடிமை பண்பாட்டுப் போக்குகளையும் எதிர்ப்பவராயிருக்க வேண்டும்.

10. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி உறுப்பினர், குடும்பத்தில் சகல வித நிலப்பிரபுத்துவ உறவுகளையும் விட்டொழித்து புதிய ஜனநாயக உணர்வுகளை மேற்கொள்ள போராட வேண்டும்.

11. சாதி, மதம், இனம், மொழி வேற்றுமை பாராட்டுபவராகவோ, உழைக்கும் மக்கள் போராட்டங்களை எதிர்ப்பவராகவோ, எந்த சாதி நிறுவனத்திலும், மதவெறி நிறுவனத்திலும், இனவெறி நிறுவனத்திலும், ஏகாதிபத்திய/அரசு சார்பு தன்னார்வத் தொண்டு நிறுவனத்திலும் உறுப்பினராகவோ தொடர்புடையவராகவோ இருக்கக்கூடாது.

12. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி உறுப்பினர் வேறெந்த மாணவர் - இளைஞர் அமைப்பிலும் உறுப்பினராக இருக்க கூடாது.

13. பெரும்பான்மையான மக்கள் பகுதியினரின் ஜனநாயக பூர்வமான பிற அமைப்புகள் கூட்டுநடவடிக்கைக்கோ, ஐக்கிய முன்னணிக்கோ, தம் நிகழ்ச்சிகளுக்கோ கலந்து கொள்ள புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி உறுப்பினரை அணுகினால், அமைப்பு ரீதியான அனுமதியுடன் தான் பங்கேற்க வேண்டும்.

14. உறுப்பினர் ஒருவருக்கொருவர் தோழமை உறவை ஏற்படுத்திக் கொண்டு தொடர்ந்து வளர்த்து வருபவராக இருக்க வேண்டும்.

15. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியில் உறுப்பினராவதற்கு கிளை பொதுக்குழு உறுப்பினர் ஒருவர் முன்மொழிய, மற்றொருவர் வழிமொழிய வேண்டும்.

16. உறுப்பினர்கள் தாம் பங்கேற்கும் அமைப்பின் கூட்டங்களுக்கு முறையாக வரவேண்டும். முறையாக ஆண்டுச் சந்தா ரூ. 2 செலுத்த வேண்டும்.

17. புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் எந்த ஒரு உறுப்பினருக்கும் மேல்மட்ட அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படவும், பிறரைத் தேர்ந்தெடுக்கவும், தேர்ந்தெடுத்தவர்களைத் திருப்பி அழைக்கவும் உரிமை உண்டு.

18. எந்த ஒரு உறுப்பினர் மீதான புகார்களையும் அமைப்பிற்குத் தெரிவிக்க ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமை உண்டு. ஒழுங்கு நடவடிக்கைக்குட்பட்ட உறுப்பினருக்கும் தன் தரப்பு கருத்துகளை மேல்மட்ட அமைப்பிற்குத் தெரிவிக்க உரிமை உண்டு.

19. தகுந்த காரணம் கூறி அமைப்பிலிருந்து விலகிக் கொள்ள எந்த உறுப்பினருக்கும் உரிமை உண்டு.

## 10. ஜனநாயக மத்தியத்துவம்

புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஜனநாயக மத்தியத்துவ முறையில் இயங்கும். அதாவது சிறுபான்மை பெரும்பான்மைக்கும், கீழ் அமைப்புகள் மேல் அமைப்புகளுக்கும், தனி நபர்கள் அமைப்புக்கும் கட்டுப்பட வேண்டும்.

மேல்மட்ட அமைப்பு வரை தனது கருத்துகளை முன்வைத்துப் போராட எந்தவொரு உறுப்பினருக்கும் உரிமை உண்டு. தோழமை முறையில் விவாதித்து தீர்த்தல், விமர்சனம் - சுயவிமர்சனத்தை மேற்கொள்தல் என்ற முறைகள் கையாளப்படும்.

## 11. கொள்கை அறிக்கை மற்றும் அமைப்பு விதிகளைத் திருத்துவது பற்றி:-

கொள்கை அறிக்கை மற்றும் அமைப்பு விதிகளைத் திருத்த மாநில மாநாட்டிற்கு மட்டுமே உரிமை உண்டு. மாநாட்டில் திருத்தங்கள் முன்மொழியப்பட்டு பெரும்பான்மை அங்கீகரித்தால் இறுதியாகும். இடைப்பட்ட காலத்தில் மாநாடு முன்பு தீர்மானித்தக் கொள்கை அறிக்கை மற்றும் விதிகளே நடைமுறையில் இருக்கும். அவசரத் தேவையானால் மாநிலப் பொதுக்குழு மாநாட்டை கூட்டும்.

★ ☆ ★

★ தனியார், சுயநிதிக் கல்வி வியாபாரிகள், மதவாதிகளின் பிடியிலிருந்து கல்வி நிறுவனங்களைப் பறித்தெடுப்போம்!

★ அனைவருக்கும் இலவச, கட்டாயக் கல்வி! அனைவருக்கும் வேலை!

★ பெண்ணடிமைத்தனத்தை ஒழிப்போம்!
பெண்கள் சமவுரிமைக்குப் போராடுவோம்!

★ புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!



புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி
தமிழ்நாடு